# வடபகுதியில் தமிழ்ப்பிரிவினுக்கள்: பிக்கு பெரமுனை தீர்மானம்


Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

மலர் 12
இதழ் 198
தேசிய தினசரி

தபால் பெட்டி எண் : 49
போன் : 389



**ஈழநாடு சந்தா**

| | தினப்பதிப்பு | வாரப் பதிப்பு |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 18-00 | ரூ. 4-00 |
| 6 மாதம் | ரூ. 34-00 | ரூ. 7-50 |
| வருடம் | ரூ. 66-00 | ரூ. 14-00 |

முற் பணம் கட்டவேண்டும்.
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.



யாழ்ப்பாணம் ஆவணி 12 ஜமா. ஆகிர் 25 வெள்ளிக்கிழமை [28-8-70]


## ஹரிஜனர் நிலைபற்றியும் கமிட்டி ஆராயும்

கோட்டை, வியாழன்

வடபகுதியிலுள்ள பௌத்த ஹரிஜனங்களுக்கென 'தமிழ் பிரிவெனு'க்கள் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுப்பதென்றும், ஹரிஜனங்களின் விவகாரங்கள் பற்றி ஆராய்வதற்கு பிக்குமாரின் குழுவொன்றை நியமிப்பதென்றும், அகில இலங்கை பிக்கு பெரமுனை கூட்டமொன்றில் முடிவு செய்யப்பட்டது.

கொழும்பு ஹெவலொக் டவுணில் எலிபேங் இல்லத்தில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு வித்தியோதய பல்கலைக்கழக பேராசிரியர் கம்புருபிட்டிய வனரத்தன தேரோ தலைமை வகித்தார். நாட்டில் ஏற்படுத்தப்படும் சகல மக்கள் கமிட்டிகளிலும் பிக்கு ஒருவரையும் நியமிக்கவேண்டும் என்று வலியுறுத்தும் தீர்மானமொன்றும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

வெளிநாட்டு தூதரகங்களில் சேவை புரிவதற்காக தெரிவுசெய்யப்பட்டுள்ள அதிகாரிகளதும் இப்போது சேவைபுரியும் அதிகாரிகளதும் பெயர் பட்டியல் ஒன்று இந்த பிக்கு பெரமுனைக்கு வழங்கப்படவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்றும் நிறைவேற்றப்பட்டது.

சிங்கள பௌத்த கலாசாரத்துக்கு ஏற்ற முறையில் வெளிநாட்டு தூதரக காரியாலயங்களையும் திருத்தி அமைக்கவேண்டுமென்றும், இந்த அரசு பதவிக்கு வந்த பிறகு ஆசிரியர்களும், அரசாங்க ஊழியர்களும் பழிவாங்கப்பட்டது பற்றி ஆராய அரசாங்கம் கமிட்டி ஒன்றை நிறுவவேண்டுமென்றும் இந்த அரசை பதவிக்கு கொண்டுவருவதற்காக காரியமாற்றிமுன்னைய அரசினுல் பழிவாங்கப்பட்ட நபர்களை மீண்டும் பதவியில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்துக்குத் தலைமை வகித்த வனரத்தினதேரோ பேசுகையில், இந்நாட்டிலுள்ள சிறந்த பௌத்த பிக்குமார்கள் அனைவரும் ஒருங்குகூடி ஆலோசிப்பதின் மூலம் இந்த அரசாங்கத்தின் அபிவிருத்திக்கு நல்ல முறையில் உதவுவதற்கு முடியும், அரசின் முற்போக்கு நடவடிக்கைகள் வெற்றி பெறும்வகையில், ஆங்காங்கேதென்படும் பலவீனங்களை அரசுக்கு சுட்டிக்காட்டவேண்டியது பிக்குமார்களின் கடமையாகும் என்றும் குறிப்பிட்டார்.

### பஸநாயக்கா குறை கூறுகிறுர்

இந்தக்கூட்டத்தில் திரு. ஹேமா பஸநாயக்கா ஐ.யூ.ஸி, பேசுகையில், இந்த அரசாங்கத்தைப் பதவிக்கு அனுப்பியமக்கள் அரசுவிடும் பிழைகளைப் பார்த்துக் கொண்டு பேசாமலிருப்பது தவறு என்றும், தவறுகளைச் சுட்டிக்காட்டித் திருத்த வேண்டும் என்றும்குறிப்பிட்


(4-ம் பக்கம்பார்க்க)


## உவர்த்தன்மை அதிகரிக்கின்றதாம்

# தண்ணீரைக் கட்டுப்பாடாக பாவிக்குமாறு வேண்டுகோள்

## பத்திரிகையாளர் மாகாநாட்டில் அரசாங்க அதிபர் எச்சரிக்கை

(நமது நிருபர் கு வி மகாலிங்கம்)

யாழ்ப்பாணம், வியாழன்

தண்ணீரில் உவர்த் தன்மை அதிகரித்து வருவதால், குழாய் நீரைக் கட்டுப்பாட்டுடன் உபயோகிக்குமாறு யாழ். நகர மக்களை அரசாங்க அதிபர் கேட்டுக்கொண்டிருக்கிறுர். நாளாந்தம் 4 இலட்சம் கலன் தண்ணீர் கோண்டாவில், திருநெல்வேலிக் கிணறுகளிலிருந்து எடுக்கப்படுவதாகவும், இதனுல் உவர்த்தன்மை அதிகரித்து வருவதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

நேற்றுக் காலை அரசாங்க செயலகத்தில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை அரசாங்க அதிபர் திரு. ஜே. எம் சபாரத்தினம் கூட்டி, உவர் நீர் பற்றிய அச்சத்தைத் தெரிவித்தார்.

[illegible]

[illegible]திரிகையாளர் மாநாட்டில் அரசாங்க அதிபர் மேலும் கூறியதாவது:

தற்போது பாவிக்கப்படும் தண்ணீரில் [illegible] 150 விகிதமான உவர்த் தன்மை மட்டுமே இருந்தது. அதா[illegible]

கொண்டே போனுல் யாழ்ப்பாணக் குடாநா[illegible]ல் உவர்த்தன்மை அதிகரித்து விடும்.

[illegible]ணை ஆஸ்பத்திரியில் [illegible]வுவதற்கும், வேறு சில உபயோகங்களுக்கும்


(4-ம் பக்கம் பார்[illegible])


## அடுத்த மாதத்திலிருந்து வீடு கட்ட கடன்கிடைக்கும்!

கோட்டை, வியாழன்

வீடமைப்புத் திணைக்களம் வீடுகட்டுவதற்கு அடுத்த மாதத்திலிருந்து கடனுகக் கொடுப்பதற்கு 50 லட்ச ரூபாவை ஒதுக்கியுள்ளது.

வீடுகட்டுவதற்கு கடன் கோரி விண்ணப்பித்தவர்களில் 500 பேருக்கு ரூபா 2 ஆயிரத்திலிருந்து 25 ஆயிரம்வரை கடனுதவி வழங்கப்படுமெனத் தெரியவருகிறது. இத்திணைக்களத்திற்கு கிடைத்துள்ள ஐயாயிரம் விண்ணப்பங்களை இப்போது பரிசோதித்து வருவதாக இத்திணைக்களத்தைசேர்ந்த உயர்தர அதிகாரி ஒருவர் இன்று தெரிவித்தார்.

இந்த ஆண்டு வீடுகட்டுத் திணைக்களம் முதன்முதலாக அடுத்தமாதம்தான் கடன் கொடுக்க ஆரம்பிக்கிறது. கடன்கோரி விண்ணப்பித்த விண்ணப்பங்களில், சராசரி வீடுகட்டுவதற்குகடன்கோரி விண்ணப்பித்தவர்களுக்குக் கூடிய கவனம் செலுத்தப்படுமெனவும் அவ்வதிகாரி தெரிவித்தார்

## கட்டைவேலி கிராமசபை தேர்தல் முடிவுகள்

## கைதான 63 இளைஞர்களும் றிமாண்டில்

### சேகுவேரா இயக்கம் பற்றி தீவிரவிசாரணை

கொழும்பு, புதன்

பயங்கர இயக்கம் ஒன்றுடன் தொடர்புகொண்டிருந்தவர்கள் என்றசந்தேகத்தின்மீது சென்ற செவ்வாய்க்கிழமை சீதுவையில் கைதுசெய்யப்பட்ட 63 இளைஞர்களும் இன்று நீர்கொழும்பு [illegible] யப்பட்டபோது அவர்களை றிமாண்டில் வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார், இவர்கள் சம்பந்தமான விசாரணை முடிவடையும் வரை அவர்களை றிமாண்டில் வைக்கும்படி பொலிசார் கோரினர். இதைத் தொடர்[illegible] வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

கைதுசெய்யப்பட்ட இளைஞர்களை விசாரணைசெய்ததிலிருந்து இந்தஇயக்கம்பற்றி அனுராதபுரம், பதுளை, அம்பலாங்கொடை ஹங்குராங்கெட்டா மாகோ, கேகாலை ஆகிய இடங்களிலும் பொலிசார் புலன்விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

இந்த இயக்கம் 1965-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகப் பொலிசார் நம்புகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றது. இத்திலைகளைத் திற்கு கிடைத்துள்ள ஐயாயிரம் விண்ணப்பங்களை இப்போது கூடிய கவனம் செலுத்தப் படுமெனவும் அவ்வதிகாரி தெரிவித்தார்

நேற்றுக் காலை அரசாங்க செயலகத்தில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை அரசாங்க அதிபர் திரு. ஜே. எம் சபாரத்தினம் கூட்டி, உவர் நீர் பற்றிய அச்சத்தைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் மட்டும் நாளாந்தம் 65.000 கலன் தண்ணீர் உபயோகிக்கப்படுவதாகவும். இதைக் கட்டுப்படுத்துவதன் மூலம் தண்ணீர் விநியோகத்தில் கணிசமான அளவைக் குறைக்கமுடியுமென்றும் அரசாங்க அதிபர் கூறினார்.

பத்திரிகையாளர் மாநாட்டில் அரசாங்க அதிபர் மேலும் கூறியதாவது:

தற்போது பாவிக்கப்படும் தண்ணீரில் முன்னர் 150 விகிதமான உவர்த் தன்மை மட்டுமே இருந்தது. அதாவது 10 லட்சம் கலன் தண்ணீரில் 200 கலன் உவர்நீர் கலந்திருந்தது. ஆனால் தற்போது 600 விகிதம் வரை உவர்நீர் அதிகரித்துள்ளது. சில வேளைகளில் 900 விகிதம் வரை கூட உவர்த்தன்மை அதிகரிக்கிறது. இது இவ்விதம் அதிகரித்துக் ... பாணக் குடாநாட்டில் உவர்த்தன்மை அதிகரித்து விடும்.

யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் கழுவுவதற்கும், வேறு சில உபயோகங்களுக்கும்

(4-ம் பக்கம் பார்க்க)

... றுடன் தொடர்புகொண்டிருந்தவர்கள் என்ற சந்தேகத்தின் மீது சென்ற செவ்வாய்க்கிழமை சிதுவையில் கைது செய்யப்பட்ட 63 இளைஞர்களும் இன்று நீர்கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர்செய் ... நீதிபதி உத்தரவிட்டார், இவர்கள் சம்பந்தமான விசாரணை முடிவடையும் வரை அவர்களை ரிமாண்டில் வைக்கும்படி பொலிசார் கோரினர். இதைத் தொடர்ந்தே அவர்களை ரிமாண்டில் ... னர்.

இந்த இயக்கம் 1965-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகப் பொலிசார் நம்புகின்றனர்.

# கட்டைவேலி கிராமசபை தேர்தல் முடிவுகள்

உடுப்பிட்டி, புலோலி வியாழன்

கடந்த நான்கு வருடங்களாக விசேஷ ஆணையாளரின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வந்த கட்டைவேலி கிராம சபையின் தேர்தல் இன்று நடைபெற்றது. பதினான்கு வட்டாரங்களை கொண்ட இக் கிராமசபையின் 14-ம் வட்டாரத்துக்கு திரு. வே. கந்தையா ஏற்கனவே போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். 7-ம் வட்டாரத்துக்கான தேர்தல் வாக்களிப்பு நிலையம் சம்பந்தமான பிரச்சனையில் அடுத்த மாதம் 9-ம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது. 5-ம் வட்டாரத்தில் ஒரு மேலதிக வாக்கால் திரு. நா. சின்னத்தம்பி வெற்றி பெற்றுள்ளார். வடபகுதி இ. போ. ச. தொழிற்சங்கப் பிரதிநிதி திரு. வே. பாலசிங்கமும் வெற்றி பெற்றுள்ளார்.

முடிவுகள் வருமாறு:

1-ம் வட்டாரம்: சுப்பையா வைத்திலிங்கம்.

2-ம் வட்டாரம்: முருகுப் பிள்ளை இரத்தினசபாபதி.

3-ம் வட்டாரம்: வி. சிவபாக்கியம்.

4-ம் வட்டாரம்: எ ஸ். மாணிக்கம்.

5-ம் வட்டாரம்: நா. சின்னத்தம்பி.

6 ம் வட்டாரம்: எஸ். தியாகராசா.

7-ம் வட்டாரம்: ஒத்திவைப்பு.

8-ம் வட்டாரம்: திருநாவுக்கரசு கணேசலிங்கம்.

9 ம் வட்டாரம்: தம்பிமுத்து கெங்காதரன்.

10-ம் வட்டாரம்: வே. பாலசிங்கம்.

11-ம் வட்டாரம்: கணபதி கணேசன்.

12-ம் வட்டாரம்: எஸ் மகேஸ்வரன்.

13-ம் வட்டாரம்: அம்பலவாணர் காங்கேசு.

14-ம் வட்டாரம்: வே. கந்தையா (போட்டியின்றித் தெரிவு)

பதின்மூன்றும் வட்டாரத்தில் வெற்றிபெற்ற திரு அம்பலவாணர் காங்கேசு 418 ஆகக்கூடிய வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

காலி பொலிஸ் கொலைவழக்கு

# பொலிஸ் அதிகாரிகள் மூவரும் விடுதலை

அக்குரஸ்ஸ, வியாழன்

காலி பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்த கைதியொருவர் மரணமானது சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் காலி பொலிஸ் முன்னுள் பொறுப்பதிகாரிமீதும் இன்னும் இருவர்மீதும்தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில் சந்தேக நபர்கள் இருவருமே விடுதலை செய்யப்பட்டனர்.

சாட்சியங்கள் முரண்பாடுகள் காரணமாக எதிரிகள் விடுதலை செய்யப்படுவதாக மாஜிஸ்திரேட் ரீசனதிராசா தெரிவித்தார்

கடந்த வருடம் ஜனவரி மாதம் 5-ம் திகதி காலியில் பொலிஸ் காவலில் இருந்த பொழுது காலி கோன்கஹா வீதியைச் சேர்ந்த மதார் சாலி மொகமட் என்பவர் காலமானது சம்பந்தமாக காலி பொலிஸ் பொறுப்பதிகாரியாகவிருந்த எஸ். வி. ஏ. சமரதாஸ மற்றும் கொன்ஸ்டபிள்கள் கோபால, கே. கருணதாஸ ஆகியவர்கள் மீதும் காலி மாஜிஸ்திரேட் முன்னிலையில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

திருநெல்வேலி இரட்டைக் கொலை

# 'கிறிஸ் கத்தியால் என் கணவனின் வயிற்றிலும் தலையிலும் குத்தினார்'

## மரணவிசாரணையில் மனைவி சாட்சியம்

யாழ்ப்பாணம், வெள்ளி

'தோட்டத்திலிருந்து என்கணவன் வீட்டிற்கு வந்தபோது கணேசபிள்ளை கிறிஸ்கத்தியால் வயிற்றில் குத்தினார், என் கணவர் குனிந்தபோது தலையில் இரண்டாவது தடவை குத்தினார். கணவர் விழும் போது என் தாயாரும், குழந்தையுடன் மச்சாளும் ஓடிவந்தார்கள். மகேஸ்வரி கையிலிருந்த உலக்கையால் என் தாயின் தலையில் அடிக்க ஓங்கினார் அந்தஅடி பிள்ளையின் தலையிலும் என் தாயின் கையிலும் விழுந்தது''

திருநெல்வேலியில் நேற்று முன்தினம் நடந்த இரட்டைக் கொலை மரண விசாரணையின்போது கொலையுண்ட நாகலிங்கத்தின் மனைவி விஜயலட்சுமி சாட்சியமளித்தபோது மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்ப்பாணம் பதில் மாஜிஸ்திரேட் திரு எஸ் கனகரத்தினம், மரண விசாரணை நடத்தினார். சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ரி. கே. பாலசிங்கம் பிரேதபரிசோதனை செய்தார்.

கந்தையா நாகலிங்கம் (வயது 30), நவரத்தினம் உதயணன் (6 மாதம் ஆகியோரின் மரண விசாரணையின் போது விஜயலட்சுமி சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது: என் கணவன், என் சகோதரன் நவரத்தினத்திற்கு 3000 ரூபா கடன் கொடுத்திருந்தார் இதையிட்டு மனோன்மணி சண்டை பிடித்தார். அன்று பருத்தித்துறையிலிருந்து நடராசா பெண் கனகாம்பிகை வீட்டிற்கு வந்திருந்தார். மனோன்மணி தான் அங்கிருக்க ஏலாதென்றும், நரக வாழ்க்கையென்றும் கூறினார். என்தாயார் குடும்பத்தை குலைக்க வேண்டாமெனக் கூறியபோது மனோன்மணி காலில் இருந்த செருப்பைக்கழட்டி மாமிக்கு அடித்தார்.

கனகாம்பிகை வீட்டை விட்டுப் போகும்போது ஒரு உயிரைப்பலியெடுத்துத்தான் போவேன் என்று சொல்லி விட்டுப்போனார். என்கணவர் நாகலிங்கம் கொஞ்சநேரத்தால் திரும்பி வந்தார், வழியில் கனகாம்பிகையை கண்டதாகவும் உன் தலைபறக்குதுபார் என்று சொன்னதாகவும் கணவர் கூறினார். வீட்டில் நடந்தவற்றை நான் கணவனிடம் கூறினேன். அதன்பின் கணவன் தோட்டத்திற்குப் போனார்.

நான் அடுப்படியிலிருந்த போது சண்முகம், கணேசபிள்ளை பரமு, ஆகியோர் வீட்டுக்குள் போய் சாமான்களை வெளியில் எறிந்து சாக்கைப் பிய்த்தார்கள், நானும் தாயும் சத்தம் போட கணேசபிள்ளை கிறிஸ் கத்தியை எடுத்து குத்துவதற்கு எங்களைக் கலைத்துக் கொண்டு வந்தார். பரமு கையில் சிலாகை ஒன்றை எடுத்து என் தாயாருக்கு அடித்தார்.

கனகாம்பிகை பெரியாம்பி மகேஸ்வரி, குஞ்சுமணி ஆகியோர் அந்த நேரம் வீட்டு வாசலில்நின்றார்கள். நான் பயந்து மற்றவீட்டுக்கு ஓடிப் போனேன் கணவன் தோட்டத்திலிருந்து வந்தார், உள்ளேவர கணேசபிள்ளை கிறிஸ்கத்தியால் வயிற்றில் குத்தினார், கணவன் குனிந்த போது தலையில் இரண்டாம் தரம் குத்தினார், அப்போது என் தாயாரும்குழந்தையுடன் மச்சாளும் ஓடிவந்தார்கள், மகேஸ்வரி உலக்கையால் தாயின் தலையில் அடிக்கஓங்கினார். அந்த அடி பிள்ளையின் தலையிலும், தாயின் கையிலும் விழுந்தது அதன்பின் எல்லோரும் ஒழுங்கையால் ஓடிவிட்டார்கள். மனோன்மணி பிள்ளையுடன் ஓடிவிட்டார். என் அண்ணன் பால்ராஜ் அவர்களை கலைத்துக்கொண்டு சென்றார். அதன்பின் நானும் அண்ணனும் கணவனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசென்றோம். அங்கு அனுமதிக்குமுன் அவர் இறந்துவிட்டார்.

பால்ராஜ் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

அவர்களைக் கலைத்துக் கொண்டு போனேன். கார் ஒன்று ஒழுங்கையி பின் நோக்கி வந்தது. அவர்கள் அக் காரில் ஏறி விட்டனர் காரை கணபதி மார்க்கண்டு செலுத்தினார். காரை சாரதி நிற்பாட்டவில்லை. கல்லால் காருக்கு எறிந்தேன். கார் டிக்கி உடைந்தது.

மரண விசாரணையின்பின், பதில் மாஜிஸ்திரேட் திரு. எஸ் கனகரத்தினம் கொலை எனத் தீர்ப்பளித்து, சந்தேக நபர்களாக கனகாம்பிகை, மகேஸ்வரி, மார்க்கண்டு ஆகியோரை அடுத்தமாதம் 11-ம் தேதிவரை ரிமாண்டில் வைக்கும் படி உத்தரவிட்டார். சந்தேகநபர்களான கணேசபிள்ளை, பரமு, குஞ்சுமணி ஆகியோரை கைதுசெய்யப் பதில் மாஜிஸ்திரேட் வாரண்ட் பிறப்பித்தார்.

# 'வட கிழக்கு உள்ளூராட்சி சமாஜம் உருவாகவேண்டும்!'

யாழ்ப்பாணம், வெள்ளி

''கௌரவ உள்ளூராட்சி அமைச்சரால் சமீபத்தில் நியமனம் செய்யப்பட்டஉள்ளூராட்சி அதிகாரசபையில் தமிழர் ஒருவர் நியமனம் செய்யப்படாதது வடக்கு கிழக்கு மாகாணங்களின் உள்ளூராட்சி மன்றங்களின் நலன்கள் பாதுகாக்கப் படாமல் ஒருதலைப்பட்சமாக எமது உள்ளூராட்சி மன்றங்கள் புறக்கணிக்கக் கூடிய அபாயம் இருப்பதால் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களும் ஒன்றுகூடி வடக்குகிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் சமாஜம் அங்குரார்ப்பணம் செய்யவேண்டும்.''

இவ்வாறு கோரும் தீர்மானம் ஒன்றை அடுத்த சுன்னாகம் பட்டினசபைக் கூட்டத்திற்கு கொண்டுவர சுன்னாகம் பட்டினசபை ஆறு அங்கத்தவர்கள் கூட்டாக முன்னறிவித்தல் கொடுத்துள்ளனர்,

மேலும் அவ்வறிவித்தல் கூறுவதாவது:-

இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களின் அரசியல், பொருளாதார சமூகக்குறைகள் பெருகிவருவதால் மிக விரைவில் தமிழ்ப்பேசும் இனம் என்று ஒன்று இருந்ததோ என்றகேள்வி எதிர்காலத்தில் எழுக்கூடிய அபாயம் மாறி மாறி வரும் அரசியல்மாற்றங்களால்எம்மை எதிர்நோக்குகிறது.

வடக்குகிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திகள் புறக்கணிக்கப்படும் வேலை இல்லதேதிண்டாட்டம் அதிகரித்தும் எமது பாடசாலையின் அபிவிருத்திகள் குன்றியும் தமிழ்மக்கள் மத்தியில்இராணுவத்தினர்களின் அட்டூழியங்களும் மிருகவெறியாட்டங்களும் கட்டுக்கடங்காது அத்துமீறியும் உள்ளூராட்சி சேவை ஊழியர்களின் நலன்கள் பாதுகாக்கப்படாமலும் உள்ளன.

---

### கூட்டுத்தாபனம் நிறுவுவதில் துரிதம்

கொழும்பு, வியா

வர்த்தக கூட்டுத்தாபனம் நிறுவுவதற்கான நடவடிக்கைகளை கைத்தொழில் அமைச்சர் ரி. பி. சுபசிங்கா துரிதமாக மேற்கொண்டுள்ளார். கூட்டுறவுமொத்தவிற்பனவு ஸ்தாபனம் 'சலுசலா' ஸ்தாபனங்கள் இந்தக் கூட்டுத்தாபனத்தின்கீழ் இயங்கும்,

# சிங்கப்பூர் பிரதமர்

## மகாதேசாதிபதியை இன்று சந்திப்பார்

கோட்டை, வெள்ளி

சிங்கப்பூர் பிரதமர் திரு. லீ குவான் யு நேற்றுக் காலை கொறக்கொல்லவிலுள்ள காலஞ் சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் சமாதிக்குச் சென்று மலர் வளையம் சாத்தி அஞ்சலி செலுத்தினார்.

இதன் பின்னர் சிங்கப்பூர் பிரதமர் கண்டியிலுள்ள பேராதனைப் பூங்காவிற்கும், பல்கலைக் கழகத்திற்கும் விஜயம் செய்தார். நேற்று இரவு கொழும்புக்குத் திரும்பினார்.

இன்று மாலை திரு. யூ மகாதேசாதிபதியைச் சந்திப்பார். இரவு பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவருக்கு இரவு விருந்தளிப்பார்.

### இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் சுக்கிரவாரமாகிய இன்று மாலை 6 முதல் 7 மணிவரை வித்துவான் திரு. க கி. நடராஜன் பெரிய புராண விரிவுரைத் தொடரில் ''குடையூர்க் கிழாடும் கோட்புலியாடும்'' என்ற பொருள் பற்றிய கதாப்பிரசங்கமும் செய்வார். இரவு 7 மணிக்கு, சுக்கிரவார அம்மன் உற்சவமும் நிகழும்.

### பந்துலு பெரேரா கொலை வழக்கு

கொழும்பு, வெள்ளி

கொழும்பு விக்ரேரரியா பூங்காவுக்கு அருகே காரில் வழிமறித்து கொலைசெய்யப்பட்ட டாக்டர் பந்துலு பெரேரா கொலை வழக்கு விசாரணை நாளை கொழும்பு சுப்ரீம் கோர்டில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படுகிறது.


பெண்களுக்கான

பேர்சிவல் மண்டபம்

யாழ்ப்பாணம்.

(Percival Hall for Girls, Jaffna.)

மேற்பார்வையாளர்: செல்வி கி. வீரகத்திப்பிள்ளை

ஆங்கிலம் ஜீ. ஸி. ஈ. (சாதாரண) வகுப்புக்கள் வரை 1970 செப்டம்பர் 16-ம் திகதி முதல் ஆரம்பம்.

சிங்கள, மேல்நாட்டு, கர்நாடக சங்கீதவகுப்புகள் அவசியம் ஏற்படும்போது கற்பிக்கப்படும்

விண்ணப்பங்கள்: 9-9-70ந் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

செல்வி கி. வீரகத்திப்பிள்ளை,

21, 2-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

2423

பெண்களுக்கான

பேர்சிவல் மண்டபம்

யாழ்ப்பாணம்.

(Percival Hall for Girls, Jaffna.)

(மெதடிஸ்த திருச்சபை)

ஜீ. ஸி. ஈ. (சாதாரண) வகுப்புவரை சிங்களம் கற்பிக்க ஆசிரியர் தேவை.

முழு விபரங்களுடன் விண்ணப்பிக்க:

செல்வி கி. வீரகத்திப்பிள்ளை,

21, 2-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

2424


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

ஸ்டீவன்ஸ் 12 BORE S. B. BL துவக்கு உண்டு. தொடர்பு கொள்க. செ: ஞானசுந்தரம், ராணி சினிமா, யாழ்ப்பாணம். 3096

### தேவை

பாவித்த வீடு, தகரக்கூரையுடன் தேவை. வாங்கித் தருபவர்களுக்கு கமிஷன் கொடுக்கப்படும். விபரங்களுக்கு: கா. சி. இராமலிங்கம், கல்குழி, சாவகச்சேரி. 3095

புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் பெண்கள் சிறுபிள்ளைகள் (Garments) ஆடைகள், பிறைசியர் (Brassiers) நுளம்பு வலைகள் முதலிய உற்பத்தித் தொழிற்சாலைக்கு அனுபவம் உள்ள பெண்மணிகள் தேவை. கீழ்க்காணும் விலாசத்திற்கு தகுதிகளைக் குறித்து மனுச்செய்க. அதிபர், 3, மெயின் வீதி, யாழ்ப்பாணம். 3094


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 28—8—70

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-15, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 மெல்லிசை, 7-30 பண்ணுரிந்தமிழ், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-30 நாளையசந்ததி.

இரவு 6-00 வாத்தியஇசை, 6-30 விவசாயநிகழ்ச்சி, 7-00 திரைகானம், 7-15 வயலின், 7-45 நேயர்கடிதங்கள், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 கதாப்பிரசங்கம், 10-30 செய்தித் தொகுப்பு.


### வெஸ்லிசினிமா

மாவிட்டபுரம்

தினசரி: 6-30, 9-30

### WANTED

Wanted- Males or Females to be trained at Medical Re--search Institute as Labora--tory Technologists and for appointment at Co-op Hospital Society Ltd., Moolai, Chulipuram Candidates should bear the cost of train--ing and should sign an agreement to serve the Hos--pital for ten years Salary according to Govt. scale. Minimum qualification-S.S.C. English with credit pass in Chemistry and one of the following subjects Physics, Botany, Zoology or Biology. Age 17to25 years. For details please apply to President. Applications close on 5-9-70 3097


## ஆம்ஸ்ரோங்கிற்கு தங்கப்பதக்கம்

### கிரி கொடுப்பார்

புதுடில்லி, ஆகஸ்ட்

புதுடில்லியிலுள்ள விஞ்ஞான மாளிகையில் நடைபெறவுள்ள சர்வதேச விமானிகள் கழக 63வது வருட மாநாட்டில் சந்திரனில் காலடி எடுத்துவைத்தமுதல் மனிதன் 'நீல் ஆம்ஸ்ரோங்'குக்கும், கொன்ராடுக்கும் ஜனதிபதி கிரி தங்கப்பதக்கம் வழங்கி கௌரவிக்கவுள்ளார். இம் மகாநாடு நவம்பர் 21ம் திகதி தொடங்கி 24ம் திகதி முடிவடையும்.


MANOHARA JAFFNA

Daily 4-45, 7-00 & 9-45 p.m.

Pre-Poya, Poya 4 Shows

George Milton in

POKER WITH PISTOLS

(Scope-color)

REGAL JAFFNA

Daily 4-45, 7 & 9-45 p.m.

Poya, Pre poya 4 Shows

Christopher Lee, Maria Rohm in

BLOOD OF FU MANCHU

(Adults only)

ஸ்ரீகாலிங்கன் இணுவில்

தினசரி 6-30, 9-30

எம். ஜி. ஆர் - பத்மினி நடித்த

அரசிளங்குமரி

ராஜா (யாழ்ப்பாணம்)

உ

செம்மனச் செல்வி அம்மையார்

## பிட்டபிஷேக சபை விஞ்ஞாபனம்

உருத்திரபுரம்

மெய்யன்புடையீர்,

நிகழும் சாதாரண ஸூ ஆவணி மீ 24-ந் திகதி (9-9-70) புதன்கிழமை காலை 11-15 மணியளவில் வரும் ஆவணி மூல நட்சத்திரத்தில் உருத்திரபுரம்சிவாலயத்தில் மேற்படி சபையினரால் பிட்டபிஷேகம் மதுரை மீனாக்ஷி சுந்தரேஸ்வரருக்கு நிகழ்வது போலவும் காசியில், காசிவிசுவநாதருக்கும், பழனியில் பழனி ஆண்டவருக்கும் அபிஷேகம் செய்வது போலவும் இலங்கையில் உருத்திரபுரீஸ்வரி சமேத உருத்திரபுரீஸ்வரருக்கும் அடியார்களால் அன்று தனித்தனியே அபிஷேகம் செய்யப்படும் தனித்தனியே பிட்டபிஷேகஞ் செய்ய விரும்பும் அடியார்கள் தங்கள் முகவரிகளை கீழ்க்காணும் விலாசத்தில் பதிவு செய்துகொள்ளவும்.

திரு. சிவ கந்தையா அவர்கள்,
சமாதான நீதிபதி,
உருத்திரபுரம்.

இங்ஙனம்
இ. நீலாயதாஷ்சி அம்மையார்,
மேற்படி சபை நிவேதனக் குழுத் தலைவி,
(மா. மு. ச. தலைவி,
உருத்திரபுரம்.)

27-8-70. 2422


## ஓய்வுபெறுவார்

ஊர்காவற்றுறை புதன் சரவணை நாகேசுவரி வித்தியாசாலைத்தலைமை ஆசிரியர் வித்துவான் சு. இ. பொன்னையா இவ்வருட இறுதியில் ஓய்வு பெறவிருக்கிறார்.

வண்ணை நாவலர் பாடசாலையில் உயர்தரக் கல்வி பயின்ற இவர் சுமார் 40 வருடம் ஆசிரிய சேவையில் இருந்துள்ளார்.

## நூல்வெளியீடு

யாழ்ப்பாணம், வெள்ளி

சைவப் புலவர் அ. கி. ஏரம்பமூர்த்தி எழுதிய 'தெய்வக்


காணவில்லை



யோசேப்பு என்னும் வாலிபன் 8-8-70 திகதிதொடக்கம் காணவில்லை. இவரை என்னிடம் அல்லது கிட்டிய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கவும். அவர்களுக்கு ரூபாய் 100 சன்மானம் வழங்கப்படும்.

ஆ. திருசிற்றம்பலம்,
வட்டு மேற்கு.
வட்டுக்கோட்டை.
2425


## சென் ஜோன் கவுன்ஸில்

யாழ்ப்பாணம், வெள்ளி

புதிய அரசாங்கம் இதுவரை தனித்தனியாக இயங்கிவந்த சென்ஜோன் அன்புலன்ஸ்படையையும், அதன் சங்கத்தையும் இணைத்து ''சென்ஜோன் கவுன்சில்'' என்ற உச்ச மகாசபையை அமைத்துள்ளது.

இச்சபைக்கு திரு மலரி விஜயசிங்க தலைவராக மகாதேசாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார். முகாந்திரம் இ பொ இராசையா யாழ்ப்பாண பிரதிநிதியாக நியமனம் பெற்றுள்ளார். மற்றும் மாவட்டங்களுக்கும் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் 3 ஆண்டுகளுக்கு கடமையாற்றுவார்களென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கவுன்ஸிலின் முதல் கூட்டம் அடுத்தமாதம் 5-ம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கிறது.

... ...

## இசை விழாவில் அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின் 11-வது தமிழிசை விழா அடுத்த மாதம் தொடக்கம் 11-9-70 வரை நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீனத்தி[illegible] மௌன [illegible] ளது.

சாவகச்சேரி கொலை முயற்சி வழக்கு

# 'தமிழரசு, காங்கிரஸ் அபேட்சகர்கள் ஆஸ்பத்திரியில் என்னை பார்த்தனர்'

யாழ்ப்பாணம், வியா.

''நான் யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரி வார்ட்டிலிருந்தபோது கடந்த தேர்தலில் சாவகச்சேரி தொகுதியில் தமிழரசு சார்பில் போட்டியிட்ட திரு. நவரத்தினமும், தமிழ்க்காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட திரு குமாரசாமியும் என்னை வந்து பார்த்தார்கள். சாவகச்சேரியில் நடந்த தமிழ்க்காங்கிரஸ் வருடாந்த மகாநாட்டின் ஊர்வலத்தில் எனது படத்தையும் கொண்டுசென்றார்கள் எனக் கேள்விப்பட்டேன்.''

சாவகச்சேரி கொலை முயற்சி வழக்கில், குறுக்குவிசாரணையின்போது காயமடைந்த ச. அசோகபாலன் என்ற வாலிபன் மேற்கண்டவாறு கூறினர். இவ்வழக்கு நேற்று சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு கே. விக்னராசா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் சாவகச்சேரியில், இவ்வருடம் ஜனவரி 14-ம் திகதி ச. அசோகபாலனை கொலைசெய்யமுயற்சித்ததாக சிதம்பரநாதன் என்பவர் மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் அட்வக்கேட் ஏ. அமிர்தலிங்கம் புறக்டர் என். அருணசலத்தின் அனுசரணையுடன் ஆஜரானர். வழக்காளி சார்பில் அட்வக்கட் எம். எஸ். சுந்தரலிங்கம், புறக்டர் எஸ் பி. மயில்வாகனத்தின் அனுசரணையுடன் ஆஜரானர்.

சாட்சியமளித்த அசோகபாலனை, எதிரிசார்பில் ஆஜரான அட்வக்கேட் ஏ. அமிர்தலிங்கம் குறுக்கு விசாரணை செய்தார்.

வழ: எதிரியை பலகாலமாகத் தெரியும்?- ஆம்.

வழ: அவர் உம்முடன் கோபமில்லை?- ஆம்.

வழ: கடந்த தேர்தலில் நீர் யாரையாவது ஆதரித்தீரா?- சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

வழ: கடந்த தேர்தலுக்கு முன் உம்மை படம் பிடித்தார்களா?- இல்லை.

வழ: தமிழ்க் காங்கிரஸ் வருடாந்த மகாநாடு நடந்தது தெரியுமா?- தெரியும்.

வழ: அது எப்ப நடந்தது?- ஞாபகமில்லை.

வழ: அது நடந்தது சம்பவத்திற்கு முன்பா பின்பா?- பின்பு.

வழ: மகாநாட்டின்போது ஆஸ்பத்திரியில் இருந்தீர்?- ஆம்.

வழ: காங்கிரஸ் அபேட்சகர் குமாரசாமி உம்மை ஆஸ்பத்திரியில் பார்த்தபோது படம் எடுத்தார்களா?- அவர் கட்டிலுக்கு அருகில் நின்றார் படம் எடுத்தது பற்றித்தெரியாது.

வழ: உமது கட்டிலுக்கு அருகில் குமாரசாமி நின்று எடுத்த படம் பத்திரிகையில் வந்தது தெரியுமா?- வந்ததென்று சொன்னார்கள்.

வழ: குமாரசாமி வந்தபோது உமக்கு நல்ல அறிவிருந்தது?- ஆம்.

வழ. நீர் குமாரசாமியின் ஆதரவாளரா?- இல்லை.

வழ: சம்பவம் நடந்த தினத்திற்குமுன் குமாரசாமி சாவகச்சேரியில் தேர்தல்பிரசார வேலைகளை தொடங்கிவிட்டாரா?- தெரியாது,

வழ: உம்முடன் நின்றவர்கள் 'குமாரசாமிக்குஜே' என்று கோஷமிட்டார்கள்?- ஆம்

வழ: நீர் சேர்ந்து சத்தம் போடவில்லை? இல்லை.

வழ: பொங்கல் ஊர்வலம் வருடா வருடம் நடைபெறும்?- ஆம்.

வழ: இந்த ஊர்வலத்தை யார் நடத்துவது?- சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர்.

வழ: நீர் எவ்வளவு நேரம் அங்கு நின்றீர்?- 15 நிமிடம்

வழ: இந்த லொறி அங்குமிங்கும் ஆட்களை ஏற்றிச் சென்றதாக கூறினீர்?- ஆம் பகல 12 மணிக்கு, இந்த லொறி ஆட்களை ஏற்றிக் கொண்டுபோனதை கண்டிரேட்டிலிருந்து கண்டேன்.

வழ: எத்தனை தடவை கண்டீர்?- ஒரு தடவை.

வழ: முருகன் ஸ்ரோசுக்கு முன்னல் நின்றவர்கள் கார்களுக்கு கற்கள் எறிந்தார்களா?- எனக்குத் தெரியாது.

வழ: நீர்நின்றபோது கார் சேதப்படுத்தப்பட்டது தெரியுமா?- தெரியாது.

வழ: உம்முடன் நின்றவர்கள் ஆர்ப்பாட்டமாகக் கத்தினர்கள்?- குமாரசாமிக்கு ஜே என்றார்கள்,

வழ: எத்தனை பேர் நின்றார்கள்?- 200 பேருக்குமேல்.

வழ: ஏன் குமாரசாமிக்கு ஜே என்கிறீர்கள் என்று கேட்டீரா?. இல்லை.

வழ: அந்த நேரம் குமாரசாமி அங்கு நின்றாரா?- நான் காணவில்லை,

வழ: சதானந்தனும் கத்தினரா?- பலர்சத்தம்போட்டபோது அவரது குரலை அடையாளம் காணவில்லை.

வழ: லொறியின்கண்ணாடி நொருக்கப்பட்டது தெரியுமா?- தெரியாது.

வழ: சடுதியாக லொறி பின்சென்று உம்மைநோக்கி வந்ததா?- ஆம்'

வழ: உம்முடன் நின்றவர்கள் ஓடிவிட்டனர்?- ஆம்.

வழ: நீர்மட்டும் அதில் அகப்பட்டீர்?- ஆம்'

வழ: லொறிக்கு ஆட்கள், கல் மண்ணால் எறிந்தார்கள்?- எனக்குத் தெரியாது,

வழ: அப்போது சாரதி தலையை பாதுகாக்க குனிந்துகொண்டார்?- எனக்கு தெரியாது'

வழ: லொறி தற்செயலாக வந்து அடித்தது?- இல்லை

விசாரணை அடுத்த மாதம் 17-ம்தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.


## இன்றைய பலன்


## 'மாணவர்களை நாட்டின் நல்லவராக உருவாக்க வேண்டும்''

மூதூர், வியாழன்

'நாட்டிற்கு நல்லன செய்யவும் ஒருமைப்பாட்டை கைக்கொள்ளவும் மாணவர்களை உருவாக்குவது ஆசிரியர் கடமையாகும். இந்த நாடு எனக்குத்தான் சொந்தமென தனிக்கொடிதான் பறக்க வேண்டுமென்று கருதாது சிங்களவர், தமிழர், இஸ்லாமியர் ஆகிய மூவினத்தோரும் தேசியத்தை வளர்க்கவேண்டும். தேசியக் கொடியை மதிக்க வேண்டும்'

இவ்வாறு உதவிஅமைச்சரும் மூதூர் முதலாவது நாடாளுமன்ற உறுப்பினருமாகிய ஜனப் அப்துல் மஜீத் திருகோணமலை மாவட்ட அரசினர் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் வருடாந்த விழாவில் பேசும்போது தெரிவித்தார்.

இவ்விழா மூதூர் புனித அந்தோனியார் பாடசாலையில் நடைபெற்றது. ஜனப் மஜீத் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்தவை:

ஆசிரியர்கள் கடமை மிக கண்ணியமானது. மிக விரைவில் தேசியக் கல்வித் திட்டம் உருவாகும். ஒரே சம்பளத்திட்டம் தமிழ், சிங்கள ஆங்கில வேறுபாடுகளைப்பட்டு சமமான புதிய திட்டமும் உருவாகிவருகின்றது என்று கூறினர்.

அடுத்துப் பேசிய மூதூர் இரண்டாவது உறுப்பினர் திரு அ. தங்கத்துரை தெரிவித்தவை:

இது ஒரு ஜனநாயகநாடு மக்கள் அரசாங்கம் மலர்ந்திருக்கின்றதெனக் கூறும் சோஷலிஸக் கொள்கை கொண்ட இந்நாட்டில் ஒரு பிரஜை அவன் விரும்பிய கொள்கையை ஆதரிக்க உரிமையுண்டு அவன் முற்போக்கோ பிற்போக்கோ கொண்ட கொள்கையை ஆதரிக்கலாம் அது அவனது சுதந்திரம். கல்வி அதிகாரி ஜனப் மஜீத், ஆசிரியர் நிக்கொலஸ் ஆகியோரும்பேசினர் காரியதரிசி செ. கதிர்காமத்தம்பி ஆசிரியர் நன்றி கூறினர்.

... ...

ச. ச. நிலைய 20-வது ஆண்டுவிழா

## நீர்வேலியில் நடைபெற்ற நானுவித போட்டி முடிவுகள்

நீர்வேலி, வியாழன்

நீர்வேலி காமாட்சியம்பாள் சனசமூகநிலைய 20வது ஆண்டு நிறைவுவிழா நிலைய விளையாட்டரங்கில் நிலையத் தலைவர் க. வல்லிபுரம் தலை

சிவகுருநாதன் நீர்வேலி அ. இ. கல்லூரி.

விழாவையொட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கும் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி இம்மாதம் 31-ம்

…ாகுப்பு.

எம். ஜி. ஆர் -பத்மினி
நடித்த
அரசிளங்குமரி

**வெஸ்லிசினிமா**
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
போயா, பிரிப்போயா 2-30
முத்துராமன்-புஷ்பலதா
நடித்த
**சுபதினம்**

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி — கே. ஆர். விஜயா
நடித்த
**தங்கை**

**ராணி** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெமினி — சௌகார்ஜானகி
நாகேஷ்—ஜெயந்தி
நடித்த
**இரு கோடுகள்**

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)

**வெலிங்டன்** யாழ்ப்பாணம் திரைகளில்
தினசரி பி.ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)



★ ஏ.வி.எம்.ராஜன்
★ சௌகார்ஜானகி
★ நாகேஷ் ★ குமாரிசச்சு
சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பதேவர்
★ கே. பி. சுந்தராம்பாள்
★ திருமுருக கிருபானந்தவாரியார்
மற்றும்பலர் நடித்த
'தெளிவில்லா இதயங்களைத் தெளியவைக்கும் தெய்வத் தமிழ்க் காவியம்'

**துணைவன்**

கதை வசனம் பாலமுருகன்
சங்கீதம் K.V. மகாதேவன்
தயாரிப்பு: சாண்டோ M. M. A. சின்னப்பதேவர்


வருடம் ஆசிரிய சேவையில் இருந்திள்ளார்.

## நூல்வெளியீடு

யாழ்ப்பாணம், வெள்ளி

சைவப் புலவர் அ. கி. ஏரம்ப மூர்த்தி எழுதிய 'தெய்வக் கீத மாலை' என்னும் பாடற்றொகுதி வெளியீடு அடுத்த மாதம் 2ந் திகதி மீசாலையில் நடைபெறும்.

(கு வி ம)

தி… 11-வது தமிழிசை விழா அடுத்த மாதம் தொடக்கம் 11-9-70 வரை நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இசைவிழாவின்போது சங்கீத பூஷணம் திருரி பத்மலிங்கத்தின் அரங்கேற்றம் சித்தூர் ஸ்ரீசுப்பிரமணிய பிள்ளையின் தலைமையில் நடைபெறும்.

வருடாந்த மகாநாடு …ந்தது தெரியுமா?- தெரியும்.

வழ: அது எப்ப நடந்தது?- ஞாபகமில்லை.

வழ: அது நடந்தது சம்பவத்திற்கு முன்பா பின்பா?- பின்பு.

வழ: தமிழ்க் காங்கிரஸ் மகாநாட்டு ஊர்வலத்தில் உமது படத்தை கொண்டு போனது தெரியுமா?- தெரியாது. கேள்விப்பட்டேன்.


இப்பொழுது திரையிடப்படுகிறது

சர்வதேச திரைப்பட அரங்கில் பாராட்டுப்பெற்ற படம், தென்னகத்திரைகளில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச்சித்திரம்.

நாணயம் சுண்டப்பட்டு மேலே போகிறது அது கீழே விழும்பொழுது நீங்களே பார்த்துவிட்டுச் சொல்லுங்கள்
பூவா — தலையா?

**யாழ்-வின்ஸர் திரையில்**

தினசரி 4 காட்சிகள்

ஜெமினி கணேசன் ★ ஜெய்சங்கர்
நாகேஷ் ★ எம். ஆர் ஆர் வாசு
ஸ்ரீ காந்த் ★ எஸ். ராமராவ்
ராஜஸ்ரீ ★ வெண்ணிறஆடைநிர்மலா
குமாரி சச்சு ★ மனோரமா ★ வரலட்சுமி
நடித்த

**பூவா தலையா**

திரைக்கதை, வசனம், டைரக்ஷன்
கே. பாலச்சந்தர்

பாடல்கள் வாலி
இசையமைப்பு எம். எஸ். விஸ்வநாதன்


## இன்றைய பலன்

(ஆவணி மாதம் 12-ம் திகதி)
(28-8-70)

மேஷம்-புத்திரர்களாலும் புகழுக்கு இடமுண்டு. வீட்டில் சுபகாரியமொன்று இடம்பெறலாம்.

ரிஷபம்- தற்பெருமை தவறான பாதைக்கு அழைத்துச் செல்லும். பொருளும் பலவழிகளிலும் செலவாகும்:

மிதுனம்- சிறுவிடயங்கள் கூட அதிக ஆத்திரத்தைத் தரலாம்: வீணான சந்தேகங்களும் தோன்றக்கூடும் சிந்தித்த பின் செயலாற்றுக.

கடகம்- சொற்சிலம்பம் ஆடுவதன் மூலம் மற்றவர்களைச் சொக்கவைப்பீர்கள் சிலர் தேர்தல் விவகாரங்களிலும் ஈடுபடலாம்.

சிம்மம்- சிந்தனை அலைகளின் மத்தியில் சிரமப்படுவீர்கள். எதிலும் விரக்தி மனப்பான்மை தென்படும். பொருளும் செலவாகும்

கன்னி- தாய்வழியால் பெருமைகள் சேரும். தனத்துடன் வாழ்வும் கிடைக்கும் எதிரிகள் உங்களை வரவேற்பார்கள்.

துலாம்- எரவேற்கவேண்டிய சம்பவங்கள் இடம் பெறும். புத்திரர்களால் பெருமகிழ்ச்சிக்கு இடமுண்டு.

விருட்சிகம்- பூமிப்பிணக்குகளால் வழக்குவிவகாரங்களில் மாட்டிக்கொள்ள நேரிடும். வாகனம்செலுத்துவோர் மிகவும் கவனமாக இருக்கவும்.

தனு ஆரம்பத்தில் முட்டுக்கட்டை போட்டவர்கள் இன்று ஆதரவு கொடுப்பார்கள். காதல் ஜோடிகளுக்கு பொன்னானதினம்.

மகரம்- அதிக நம்பிக்கை ஆபத்தைத் தேடித்தரலாம்! தன்கையே தனக்குதவி என்று செயலாற்றவும்

கும்பம்- சில விடயங்களில் நீங்கள் அதிகம் உணர்ச்சி வசப்படுவீர்கள். கவர்ச்சிகரமான தினம்-

மீனம்- தொழில் மாற்றம் அல்லது இருப்பிடமாற்றத்திற்கு வழிகோலப்படலாம். இதன்மூலம் பதவிஉயர்வும் கிடைக்கலாம்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## …போட்டி முடிவுகள்

நீர்வேலி, வியாழன்

நீர்வேலி காமாட்சியம்பாள் சனசமூகநிலைய 20வது ஆண்டு நிறைவுவிழா நிலைய விளையாட்டரங்கில் நிலையத் தலைவர் க. வல்லிபுரம் தலைமையில் நடைபெற்றது. யாழ். மாவட்ட அரசாங்க உதவி அதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளை தீபம் ஏற்ற, கோப்பாய் ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை நிலையக் கொடியேற்றி விழாவை ஆரம்பித்துவைத்தார். நிலைய கீதத்தை யடுத்துக் காரியதரிசி க. பத்மநாதன் ஆண்டறிக்கை வாசித்தார்.

வடபிராந்திய சனசமூக நிலைய ஆய்வு உத்தியோகஸ்தர் திரு வி கிருஷ்ணசாமி, யாழ். மாவட்ட சனசமூக நிலைய சமாசத் தலைவர் திரு. வி. சுப்பையா, பண்டிதை சத்தியதேவி துசிங்கம், வித்துவான் மு. சபாரத்தினம், காணியபிவிருத்தியதிகாரி தேவதாசன், திரு. மகேசன், நீர்வேலிக் கிராம சபைத் தலைவர் திரு. இ. அப்பாத்துரை, உறுப்பினர் மு. பூபாலசிங்கம் ஆகியோர் பேசினர்.

நீர்வேலி அ. இ. கல்லூரி மாணவிகளான அ. விமலாதேவியின் இசைவிருந்தும் க. பரமேஸ்வரியின் நடனவிருந்தும், 'ஆடலரசி' என்ற நாடகமும் இடம்பெற்றன.

விழாவையொட்டி நடைபெற்றபோட்டிகளில்வெற்றி வெற்றவர்கள் விபரம்

25 மைல் சைக்கிலோட்டப்போட்டி: கே. சிவபாலன் உடுவில், கே. செல்வராசா காங்கேசன்துறை, எஸ். எஸ். மகேந்திரன் அளவெட்டி,

10 மைல் மரதன் ஓட்டப் போட்டி: செ. இராசதுரை சுன்னாகம், கே காசிலிங்கம் இருபாலை, நா. தங்கவேலு புத்தூர், க. தனராசா புத்தூர், கே. ஸ்ரீபாலசண்முகம் இருபாலை, மு. கந்தையா புத்தூர். இ பாலச்சந்திரன் நீர்வேலி, ச. மகாலிங்கம் நீர்வேலி.

220 யார் ஓட்டப்போட்டி மேற்பிரிவு: நீர்வேலிவாசிகள்:- இ. துரைசிங்கம், இ. தவலிங்கம், வி. செல்வநாயகம், செ. பத்மநாதன், த. சந்திரசேகரசுந்தரலிங்கம்.

220 யார் ஓட்டம் கீழ்ப்பிரிவு நீர்வேலி வாசிகள்:- இ. சிவபுத்திரன், சி. யுகராசா, இ. இராசேஸ்வரன், க. பேரின்பநாதன், செ. இராசேஸ்வரன்.

பேச்சுப்போட்டி (மாணவர்கள்:- க. சண்முகலிங்கம் நெல்லியடி மகாவித்தியாலயம், ச. சிவலிங்கம் நீர்வேலி அ. இ. கல்லூரி, ச. சிவகுருநாதன் நீர்வேலி அ. இ. கல்லூரி.

விழாவையொட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கும் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி இம்மாதம் 31-ம் திகதி முடிவடையும்

## மின்சாரத் துண்டிப்புக்கு உத்தரவு

கோட்டை, வியாழன்

மின்சாரக் கட்டணம் செலுத்தாதவர்களுக்கு மின்சாரம் விநியோகிப்பதை உடனடியாகத் துண்டித்து விடும்படி மின்சார சபைத் தலைவருக்கு உள்நாட்டு அரசாங்க அதிகாரி உத்தரவிட்டுள்ளார்.

சுமார் 2கோடி ரூபாவரை மின்சாரக் கட்டணம் மக்களால் செலுத்தப்படாமல் இருப்பதைத் தொடர்ந்து இவ்வித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## கிராமசபை நன்கொடை

சுழிபுரம், வியாழன்

சுழிபுரம் பறுளை முருகமூர்த்திகோவிலுக்கு முன்பாக விசாலமான அளவில் சிரமதான மூலம் அமைக்கப்பட்டுவரும் பாதைக்கு ஆயிரம் ரூபா வழங்க சுழிபுரம் கிராமசபை முன்வந்துள்ளது. 12,000 ரூபா தேவைப்படும் இத்திட்ட வேலைக்கு இதுவரை பொது மக்கள் சுமார் மூவாயிரம் ரூபா நன்கொடை வழங்கியிருக்கின்றனர். சிரமதான சபையினர் பொதுமக்களிடம் பணம் திரட்டுவதில் கவனம் செலுத்திவருகின்றனர்.

## மாதர் மு. சங்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த நாரந்தனை மாதர் முன்னேற்ற சங்கத்தின் நடப்பு வருடத்திற்குப் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவி: திருமதி செசீலியா பீற்றர், உபதலைவி: திருமதி திவ்யம் மனுவற்பிள்ளை, காரியதரிசி திருமதி திரேசா பீற்றர்பிள்ளை, உதவிக் காரியதரிசி செல்வி அல்பிறேற், தனதிகாரி: திருமதி பேர்ணதேத் அன்ரன் மற்றும் நால்வர் நிர்வாகசபை அங்கத்தினராகத் தெரிவு செய்யப்பட்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்காஸிய அமைதிக்காக சோவியத் யூனியனுடன் ஒத்துழைக்க அமெரிக்கா தயாராம்

நியூயோர்க், ஆக 27

மேற்காஸியாவில் அமைதியை ஏற்படுத்துவதற்கு சோவியத் யூனியனுடன் ஒத்துழைக்கத் தயாராய் இருப்பதாக அமெரிக்கா அறிவித்திருக்கிறது.

மேற்காஸிய விவகாரங்களில் இருநாடுகளுக்கும் அதிக அக்கறை இருப்பதன் காரணமாக அங்கு அமைதியேற்படுத்துவதில் இருநாடுகளுமே ஒத்துழைக்க முடியும் என்று அமெரிக்கா கருதுகின்றது.

கலிபோர்னியாவில் அதிபர் நிக்ஸன் இப்பொழுது தங்கியிருக்கும் மாளிகையிலிருந்து மேற்கண்ட செய்தி வெளியிடப்பட்டது.

### டாக்டர் ஜாரிங்

மேற்காஸிய அமைதிக்கான ஐ. நா. வின் விசேஷத் தூதுவர் டாக்டர் ஜாரிங் நேற்றும் தொடர்ந்து தமது பணிகளை மேற்கொண்டிருந்தார். ஜோர்டான் பிரதிநிதியோடும், ஐக்கிய அரபுக்குடியரசு பிரதிநிதியோடும் டாக்டர் ஜாரிங் நேற்று தொடர்ந்து பேச்சுக்கள் நடத்தினர். இஸ்ரேல் பிரதிநிதி டாக்டர் ஜாரிங்குடன் இருதடவை ஆலோசனைகள் நடத்தியபின்னர் தமது நாட்டுத்தலைவர்களுக்கு பேச்சுக்களின் நிலைமைபற்றி விளக்குவதற்காக தாயகம் திரும்பியிருக்கிறார்.

இஸ்ரேலியரின்

## போர் ஓய்வு மீறல்: ஐ. நா. விடம் புகார்

இஸ்ரேலியர் போர்நிறுத்த ஏற்பாடுகளை மீறிவருவதாக ஐக்கிய அரபுக் குடியரசு ஐ.நா. விடமும், மேற்காஸியாவிலுள்ள ஐ. நா: பார்வையாளரிடமும் புகார் தெரிவித்திருக்கின்றது.

சூயஸ் கால்வாயின் கிழக்குக்கரையோரப் பகுதியில் ஏராளமான படைகளைக் கொண்டு வந்து இஸ்ரேலியர் குவிப்பதற்காகவும் அப்பிரதேசத்தில் புதிய ராணுவ அரண்களை நிறுவுவதற்காகவும் எகிப்தியர் புகார் தெரிவித்துள்ளனர்.

## சூடான் அரசை கவிழ்க்க சதி?

சூடானில் பதவியிலிருக்கும் புரட்சி அரசாங்கத்தை புரட்சிமூலம் கவிழ்ப்பதற்கு இரகசியமாக செயல்பட்டதாகக் கருதப்படும் புரட்சியொன்று முறியடிக்கப்பட்டுள்ளது.

ராணுவத்தைச் சேர்ந்த ஏராளமான சிப்பாய்களும் அதிகாரிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். பெருவாரியான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சூடானுக்கும் ஐக்கிய அரபுக்குடியரசுக்குமிடையில் பிளவுகளை ஏற்படுத்துவதற்காக சூடானில் பத்திரிகைகளையும் பத்திரிகை ஏஜன்ஸிகளையும் சூடான் அதிபர் தேசஉடைமையாக்கியிருக்கிறார்.

## யாழ். நகர சினிமா தியேட்டர்கள் சீர்கேடு

### விசாரணை செய்வதற்கு மாநகரசபை குழு நியமனம்

யாழ்ப்பாணம், வெள்ளி

பிரிட்டனில்

## துப்பாக்கிகள் பிடிபட்டன

லண்டன், ஆக 27

பிரிட்டனில் நேற்று பொலிசார் நடத்திய சோதனையொன்றின்போது ஏராளமான துப்பாக்கிகளையும் வெடிமருந்துகளையும் கைப்பற்றியிருக்கிறார்கள்.

ஐரிஸ் தீவிரவாதிகள் தமது பயங்கர திட்டங்களுக்காக இவைகளைப் பயன்படுத்த வைத்திருந்தனர். என்று முன்னதாகக் கூறப்பட்டது. ஆனல் இந்த சோதனைகளுக்கும் அரசியலுக்கும் சம்பந்தமில்லையென்று பொலிசார்பின்னர் அறிவித்தனர்.

— —

## இரண்டுவாரத்தில் மாற்றம்

சென்னை, ஆகஸ்ட் 27

தி. மு. க. நிர்வாகக்குழுவின் தீர்மானத்திற்கிணங்க தமிழ்நாடு திராவிட முன்னேற்றக்கழக அரசாங்கத்தின் மந்திரிசபையில் மாறுதல் செய்யப்படவுள்ளது. ஆனல் இம்மறுத்தல் உடனடியாகச் செய்யப்படமாட்டாதெனவும் இன்னும் இரண்டு வாரங்களாவது செல்லுமெனவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதால் கிராமத்திலிருந்து மேல் மட்டம் வரை ஒங்முகை நிலைநாட்டி கட்சியைப் பலப்படுத்துவதில் சம்பந்தப்பட்டவர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகவும் தெரிகிறது.

— —

## நெடுஞ்செழியனுக்கு கறுப்புக்கொடி

மதுரை, ஆகஸ்ட் 27

மதுரை மாவட்டத்தில் நெஞ்செழியனுக்கு இரண்டு இடங்களில் கறுப்புக்கொடி காட்டப்பட்டது. தமிழ்நாட்டுக்குத் தனிக்கொடி கேட்பதை எதிர்த்துச் சுமார் 1000 காங்கிரஸ்காரர்கள் கறுப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டத்திலீடுபட்டனர்.

கேரளப் பெண்கள் பற்றிய

## லண்டன் பத்திரிகைக்கு கேரளப் பிஷப் மறுப்பு

சென்னை, ஆக. 27

கேரளத்திலிருந்து வெளிநாடுகளுக்கு மதப்பார்வையில் பெண்கள் கொண்டு செல்லப்பட்டு ஐரோப்பாவில் உள்ள கன்னியாஸ்திரிகள் மடங்களில் சேர்க்கப்படுகிறார்களென்றும் இவர்களை விலைகொடுத்தே சம்பந்தப்பட்டவர்கள் வாங்குகிறார்களென்றும் சண்டே டைம்ஸ் பத்திரிகையில் வெளியான செய்திகுறித்து திருவனந்தபுரம் ஆர்ச்பிஷப் மறுப்புத்தெரிவித்துள்ளார்.

கேரளத்திலிருந்து கன்னியஸ்திரிகளாவதற்கு பெண்கள் ஐரோப்பிய நாடுகளுக்குப் போவது உண்மையே என்று தெரிவித்த அவர் ஐரோப்பிய நாடுகளுக்கு சென்று கன்னியாஸ்திரிகளாக சேவை செய்வதற்கு தேர்ந்தெடுக்கப்படும் பெண்களுக்கு அங்கு எப்படிப்பட்ட வாழ்க்கை வாழவேண்டுமென்பதுபற்றி சொல்லிக் கொடுக்கப்படுகிறது என்றார்.

கன்னியாஸ்திரிகளாகவிரும்பில்போகின்றவர்கள் அங்கு இருக்கத்தான் வேண்டுமென்பதில்லை. அவர்களுக்கு பிடிக்காவிட்டால் திரும்பி வந்துவிடலாம் என்றும் அப்படித் திரும்பியும் வந்துள்ளனரென்றும் தெரிவித்த அவர் அவர்கள் பயிற்சி பெறும்காலத்தில்கணிசமானதொகை அவர்களுக்கு வழங்கப்படுவதாகவும் கூறினார்.

உயர்நோக்கத்துடன் நடக்கும் ஒரு காரியத்தைத் திரித்துக்கூறி அவப் பெயர் ஏற்படுத்துவது முற்றிலும் தகாது என பிஷப் வருத்தம் தெரிவித்தார்.

வெளிநாடுகளுக்கு பெண்களை விற்பதில் இடைத் தரகன் வேலைபார்க்கும் எட்மனு 'பவன் என்று சண்டே டைம்ஸில் வர்ணிக்கப்பட்ட [illegible]சார்பற்ற நிர்மலா பவன் டைரக்டர் இதுசம்பந்தமாக கருத்துத் தெரிவிக்கவில்லை; கன்னியாஸ்திரிகள் மடங்களுக்குப் போக விரும்பியசுமார் 500 பெண்களுக்கு தமது நிலையப் பயிற்சியளித்துள்ளதை கூறி அப்படி வெளிநாடுசென்ற பெண்களில் சுமார் பத்துப் பேர் நோய் காரணமாக இந்தியா திரும்பியதையும் சொன்னார்.

— —

## ஆசிரியர் சங்க ஆலோசனையை அரசு மதிக்கும்

பருத்தித்துறை, வியா.

இன்றைய அரசாங்கம் ஆசிரியர் சங்கங்களின் ஆலோசனைகளை அடிப்படையாகக்கொண்டே கடமையாற்றும். ஆகவே ஆசிரியர்கள் இன, மத, மொழி வேறுபாடின்றி அரசாங்கத்தை ஆதரிக்கவேண்டும்''

இவ்வாறு ஜாதிக குருசங்கத்தலைவர் திரு. எல் ஆரியவன்சா வட்பகுதி பௌத்த பாடசாலை ஆசிரியர் சங்கம் அளித்த வரவேற்பில் தெரிவித்தார்.

திரு. பொன் குமாரசாமி பேசும்போது ஆசிரியர்கள் ஜாதிக குருசங்கத்தில் ஆசிரியர்கள் சேர்வது சுபீட்சமான எதிர்காலத்துக்கு ஒரு சகுனமென்று தெரிவித்தார்.

திரு. எஸ். ஜெயசிங்கம் தலைமையில் இக்கூட்டம் நடந்தது.

## குப்பைக்கு வைத்த தீ வீட்டை எரித்தது

ஆனையிறவு, வியாழன்

குப்பைமேட்டுக்கு வைத்த தீ வீட்டைச் சாம்பராக்கியது.

ஆனையிறவு உப்புக்கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த முத்துக்கருப்பன் என்பவருக்குச் சொந்தமான வீடே இவ்வாறு நெருப்புக்கிரையானது.

வீடு எரிந்து கொண்டிருந்தபோது அதனை [illegible]க்க அயலவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி எதுவும் பயனளிக்கவில்லையென்றும் தெரிகிறது.

## இன்று வடமராட்சிக் கலைப் பெருவிழா

அம்பன், வெள்ளி

வடமராட்சி வடக்குக் கிழக்குக் கலாமன்றத்தினரின் கலைப் பெருவிழா 2-ம் நாள் நிகழ்ச்சிகள் இன்று பிற்பகல் 6-30 மணியளவில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் வடமாநிலக் கல்வியதிபதி திரு. வி சங்கரலிங்கம் தலைமையில் ஆரம்பமாகும் சிறுவர் மிருதங்கக் கச்சேரியும், புலோலி கிழக்குத் தமிழிசை மன்றத்தினரின் பாட்டுக்கச்சேரியும் ''இசைமணி கே. துரைராசாவின் பாட்டுக் கச்சேரியும் 'துட்டகைமுனுவின்காதலி', 'பக்த நந்தனர்', 'மன்னிப்பு' முதலிய நாடகங்களும் இன்றைய நிகழ்ச்சிகளாக அமையும்.

— —

## சாகித்திய மண்டலம் நம்பிக்கை அளிக்கவேண்டும்

யாழ்ப்பாணம், வெள்ளி

'கடந்த காலத்தில் சாகித்திய மண்டலத்தின் மீது கொண்டுள்ள அதிருப்தி இல்லாதவாறு எதிர் காலத்தில் சாகித்திய [illegible]றுப்பினர்கள் நம்பிக்கையை பெறும் நடவடிக்கைகளைமேற்கொள்ள வேண்டும்'.

இவ்வாறு இலங்கைசாகித்திய மண்டல உறுப்பினர்களாக நியமனம் பெற்ற திரு. வ. பொன்னம்பலம். ஜனுப் எம். எம். உவைஸ் ஆகிய இருவருக்கும் யாழ் இலக்கிய வட்டம் அனுப்பியுள்ள பாராட்டுக் கடிதத்தில் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் யாழ் இலக்கிய வட்டத்தின் சார்பில் இணைச் செயலாளர் திரு. யாழ்வாணன் அனுப்பியுள்ளார்.

— —

## சங்க நிர்வாகிகள்

கைதடி, வியாழன்

கைதடி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் விபரம் வருமாறு: தலைவர். எஸ். கனகசபாபதி (மீண்டும் தெரிவு) உபதலைவர்: எஸ். பொன்னன், செயலாளர் கே. சதாசிவம், கே. வேலுப்பிள்ளை. எஸ். சேனுதிராசா எம். நல்லதம்பி, கே, வயிரமுத்து, பி. சின்னவன்: என். இளையவன். வி, குமாரசாமி ஆகியோர் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரியப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியேட்டர்கள் சீர்கேடு
## விசாரணை செய்வதற்கு
## மாநகரசபை குழு நியமனம்

யாழ்ப்பாணம், வெள்ளி
யாழ்ப்பாணத்திலுள்ள படமாளிகைகளில் நிலவும் சீர்கேடுகள் பற்றி விசாரணை செய்வதற்கு யாழ். மாநகரசபை உறுப்பினர்களைக் கொண்ட படமாளிகைக் குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

படமாளிகைகளில் புகை பிடிப்பது, காற்றோட்டக் குறைவு, மேலதிக ஆசனங்கள், ஆசன இடைவெளி சிறுபிள்ளைகளுக்கு முழுக் கட்டணம், மலசல கூட வசதி மற்றும் ஏனைய விஷயங்களையிட்டு பொதுமக்களின் அபிப்பிராயங்கள் கோரப்படுகின்றன.

படமாளிகைக் குழுவின் ஆலோசனைக்கு அடுத்த மாதம் 14-ந் திகதிக்கு முன்னர் பொதுமக்களின் அபிப்பிராயங்கள் மாநகரசபை ஆணையாளரின் விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும். நேர்முக விசாரணைக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

படமாளிகைக் குழுவில் கீழ்க்காணுமோர் அங்கம் வகிக்கின்றனர். திருமதி அ சுவாமிநாதர் (தலைவர்), திருவாளர்கள் என். அன்ரனிப்பிள்ளை, எஸ். ஜே. அன்ரனி, தம்பு கந்தையா. க. வீ. தெய்வேந்திரன், ஜனாப் எம். ஏ. சி. எஸ். ஏ. காதர், ஜனாப் எம். ஜி. பஸீர்.

— —

## குற்றங்களை தடுக்க தொண்டர் சபை

மாவிட்டபுரம், வியா.
சுன்னாகம் பொலிஸ் பகுதிகளில் நடைபெறும் சிறுசிறு சச்சரவுகளையும், குற்றங்களையும் தடுக்க தொண்டர் படைகள் அமைக்கப்படவிருக்கின்றன.

சமுதாயத்தில் ஏற்படும் குற்றச்செயல்களை தடுக்கக் கூடிய நடவடிக்கைகளை கிராமங்களில் தொண்டர் படைகள் அமைத்து அவற்றின் மூலமே செய்யமுடியும் என நம்பிக்கையுடன் சுன்னாகம் பொலிஸ் நிலைய அதிபர் திரு எஸ். நவரத்தினராசா கிராமந்தோறும் தொண்டர் படைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

முன் புஇயங்கிவந்த சபைகளுக்குபுத்துயிரளிப்பதுடன் புதிய சபைகளை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## "தமிழரையும் நியமிக்கவும்"

மாவிட்டபுரம் வியா
உள்ளூராட்சி சேவை அதிகாரசபைக்கு ஒரு தமிழரும் நியமிக்கப்பட வேண்டும் எனகேரும் தீர்மானம் அகில இலங்கை பட்டினசபைகள் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் கொண்டுவரப்பட இருக்கிறது.

இம்மாதம் 29,30,31-ம் திகதிகளில் பொலநறுவையில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்தில் காங்கேசன்துறைப் பட்டினசபைத்தலைவர் திரு. க ஜெயபாலசிங்கம் இப்பிரேரணையைப்பிரேரிக்க முன்னறிவித்தல்கொடுத்துள்ளார்.

இதையடுத்து ஜனநாய உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தலைவர் திரு. த சக்திவேல் திரு. ஜெயபாலசிங்கத்துக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் தங்களால் கொண்டுவரப்பட இருக்கும் உள்ளூராட்சிசேவை அதிகாரசபையில் ஒரு தமிழ் மகன் நியமிக்கப்பட வேண்டும் என்ற பிரேரணை தமிழ் பேசும் உள்ளூராட்சி மன்ற ஊழியர்களுக்கும் தலைவர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் பேருதவியாக உள்ளதால் தங்கள் பிரேரணை வெற்றிபெற வேண்டுமென வாழ்த்துகிறோம் என தெரிவித்துள்ளார்.

---

## ஆங்கில ஆசிரியர் எதிர்ப்பு

கோட்டை, வியா.
3ந் தரத்திற்குப் பதிலாக 5ந் தரத்திலிருந்தே மாணவர்களுக்கு ஆங்கிலக் கல்வியைப் போதிப்பதென்ற கல்வியமைச்சின் தீர்மானம் செயல்படுத்தப்பட்டால் 2,000 ஆங்கில ஆசிரியர்களின் வேலைவாய்ப்பை மறுப்பதாக அமையும்.

அகில இலங்கை அரசாங்க ஆசிரியர் சங்கம் மேற்கண்டவாறு கல்வியமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத்துக்கு அறிவித்துள்ளது.

மேற்படி தீர்மானத்தை எதிர்க்கும்வகையில் அகில இலங்கை அரசாங்க ஆங்கில ஆசிரியர் சங்கம், 3ந் தரத்திலிருந்து ஆங்கிலம் கற்பிக்கப்படும் தற்போதைய முறையை நீக்க வேண்டாமெனவும் கோரியுள்ளது.

இடங்களில் கறுப்புக்கொடி காட்டப்பட்டது. தமிழ்நாட்டுக்குத் தனிக்கொடி கேட்பதை எதிர்த்துச் சுமார் 1000 காங்கிரஸ்காரர்கள் கறுப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டத்திலீடுபட்டனர்.

'கருணாநிதி தலைமையிலான அரசாங்கத்தைக் காப்பாற்ற நாங்கள் உயிர் விடவும் தயார்' என்று கூறியபடி தி. மு. க. ஆதரவாளர்கள் காங்கிரஸ் காரர்களுக்கெதிரான ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர்.

---

## 'புதிய தபால் நிலையம் கிடைக்கும்'
### அமைச்சர் உறுதி

பருத்தித்துறை, வியா.
"கடந்த ஏழு ஆண்டுகளாக வியாபாரிமூலைக்கு ஒரு உபதபால் கந்தோர் வேண்டுமென மக்கள் அரசாங்கத்திற்குவிடுத்த கோரிக்கை யதார்த்தமாக விருக்கிறது"

இவ்வாறு பருத்தித்துறை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக் கிளை அமைப்பாளர் திரு. கே. எஸ். கணேசுவிற்கு தபால் தந்தி அமைச்சர் திரு செ குமாரசூரியர் அனுப்பியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அதில் குறிப்பிட்டுள்ளதாவது: ஒரு நவீன வசதிகளமைந்த தபால் கந்தோர் கட்டுவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு போஸ்ற்மாஸ்ரர் ஜெனரலுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது."

அல்வாய் வடக்குக்கிராம சேவகர் பகுதியில் அமைக்கப்படவிருக்கும் இத்தபால் கந்தோரை அமைச்சர் திரு. குமாரசூரியரே திறந்துவைப்பாரென்றும் திரு. கணேசு தெரிவித்தார்.

—

## கவலை தெரிவித்து தீர்மானம்

கோட்டை, வியாழன்
மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் தேர் அண்மையில் எரிக்கப்பட்டமைக்கு கவலை தெரிவித்துக் கொழும்பு விவேகானந்தசபை தீர்மானம் நிறைவேற்றியது' சபையின் முகாமைச்சபை கடந்த வாரம் கூடியபோது மேலும் இதுபோன்ற சம்பவங்கள் நிகழாவண்ணம் தகுந்த பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கும்படி அரசாங்கத்தைக் கோருவதெனவும் தீர்மானம் நிறைவேற்றியது

...ம்ஸில் வர்ணிக்கப்பட்ட ...சார்பற்ற நிர்மலா பவன் டைரக்டர் இதுசம்பந்தமாக கருத்துத் தெரிவிக்கையில்: கன்னியாஸ்திரிகள் மடங்களுக்குப் போக

...னது.
வீடு எரிந்து கொண்டிருந்தபோது அதனை ...னக்க அயலவர்கள் எடுத்துக் கொண்டமுயற்சி எதுவும் பயனளிக்கவில்லையென்றும தெரிகிறது.

முத்து, பி. சின்னவன்: என். இளையவன், வி, குமாரசாமி ஆகியோர் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரியப்பட்டனர்.

---

### இந்திய அரசியல் சட்டத்தில்

# தனிக்கொடி கோரிக்கையை தடை செய்யும் ஷரத்து இல்லை

## புதுடில்லியில் கருணாநிதி

புதுடில்லி, ஆக. 27
தனிக்கொடி கோரிக்கையைத் தடைசெய்யும் ஷரத்து எதுவுமில்லை என்று தமிழ் நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி இங்கு கூறினார்.

'தனியாக ஒரு கொடியை நாங்களே தீர்மானித்து வைத்துக்கொள்ள முடியும் ஆனால் அக்கொடியில் தேசியக் கொடியும் இடம்பெறுவதால் தான் மத்திய அரசின் அனுமதியைக் கோர வேண்டியிருக்கிறது. இந்தக் கொடியின் மாதிரி ஒன்றையும் பிரதம மந்திரிக்கு அனுப்பியிருக்கிறோம்' இவ்வாறு திரு. கருணாநிதி கூறினார்

இணைப்பாட்சி நிலவும் பல நாடுகளிலும் இப்படியான தனிக்கொடிகள் உண்டு எனவே இதில் சிக்கல் எதுவுமிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை என்று திரு. கருணாநிதி குறிப்பிட்டார்.

இந்த விஷயம் பற்றி மாநில முதலமைச்சர்களுடன் விரிவாக ஆலோசிக்கப்பட்டபின்னரே முடிவு அறிவிக்கப்படும் என்று பிரதம மந்திரி அறிவித்திருப்பதையும் திரு. கருணாநிதி சுட்டிக்காட்டினர்.



---

### அமைதியான முறையில்

# உறவை வளர்க்க சீனா விரும்புமா?

## இந்திய நிலைபற்றி சுவரண்சிங் விளக்கம்



புதுடில்லி, ஆக, 27
இந்தியாவுடன் முறையான உறவுகளை ஏற்படுத்திக்கொள்ள கம்யூனிஸ்ட் சீனா விரும்புமானால் அதற்குத் தக்கபடி இந்தியாவும் நடந்துகொள்ளத் தயாராய் இருக்கிறது என்று வெளி உறவு மந்திரி திரு சுவரண்சிங் லோகசபையில் கூறினார்.

சீனாவின் பிரசாரப் போரில் சமீபகாலமாக சற்று மாறுதல் காணப்படுகின்றது: ஆனால் பாரதத்துடனான விவகாரங்களில் மாற்றம் எதையும் காணவில்லை.

இந்தியாவுடனான எல்லைப் பிரச்னைகளை போர் மூலமன்றி அமைதியான முறையில் தீர்த்துக்கொள்ள சீனா முன்வந்தால் மாத்திரமே அந்த நாட்டுடன் உறவுகளை ஏற்படுத்திக்கொள்ள முடியும் என்று திரு சுவரண்சிங் குறிப்பிட்டார்.

படைபலத்தைக் காட்டிப் பயமுறுத்த எதனித்தால் பாரதம் தனது பிராந்தியத்தின் ஒவ்வொரு அங்குலத்தையும் காப்பாற்றிக் கொள்ள உறுதியாக இருக்கும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

பாகிஸ்தானுடனான உறவுகள் பற்றி திரு சுவரண்சிங் குறிப்பிடுகையில் பாரத பாகிஸ்தான் மக்கள் அமைதியாக வாழவே விரும்புகிறார்கள்.

ஆனால்பாகிஸ்தானிலுள்ள தலைவர்கள்தான் எப்பொழுதும் நெருக்கடி நிலைமையை வைத்திருக்க முயற்சி செய்கிறார்கள் என்றார்.

சோவியத் நாடு வெளியிட்டுள்ள பூகோளப் படங்களில் இந்திய பகுதிகள் சீனாவுக்குரியதாகக் காட்டப்பட்டிருப்பது பற்றியும் திரு. சுவரண்சிங் குறிப்பிட்டார்.

இந்த விஷயம் குறித்து சோவியத் யூனியனிடம் பல தடவைகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இப்பொழுதும் சோவியத் அரசாங்கத்துக்கு இதுபற்றி எமது ஆட்சேபத்தை தெரிவித்துள்ளோம்.

இந்த விஷயம் சோவியத் நாட்டுடனான உறவுகளை பாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று அவர் சொன்னார்.




# 'அல்கதீன்'

## உபயோகிப்பதற்கு மிக இலகுவான குழாய், நீளம் வாய்ந்தது - எளிதாய் வளைந்துகொடுப்பது

கமத்தொழிலுக்கும், உணவு உற்பத்திக்கும், இன்று ஏற்பட்டுள்ள பெரும் பிரச்சினை, இலகுவானதும், திறம்பட்டதும், செலவு குறைந்ததுமான நீர்ப்பாய்ச்சு முறை எது என்பதுதான்.

**அல்கதீன் அப் பிரச்சினைகளையெல்லாம் தீர்க்கிறது.**

நெடு நீளம் வாய்ந்தது, எளிதில் வளைந்து கொடுப்பது, எடை குறைந்தது, பிரித்தமைக்கக்கூடிய மூட்டுகள் கொண்டது, செலவு குறைவானது, அரிக்கப்பட்டு அழிந்தொழியாதது, நொருங்காதது, உராய்வுச் சேதம் இல்லாதது.

**இவற்றுடன் இன்னும் எத்தனையோ குணநலங்கள்!**

கமத்தொழில், கட்டிட அமைப்புகள், வீடமைப்பு ஆகியவற்றில் நீர் வசதி பற்றிய பிரச்சினை எது எழுந்தாலும்-அல்கதீன் அவற்றை விரைவாக நீக்கி வைக்கும்.

**'அல்கதீன்'**

பிற குழாய் வகைகள் யாவற்றிலும் சிறந்து விளங்குவது!

CIC கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட்., தபாற் பெட்டி இல: 352, கொழும்பு.

AJNS.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

அமைதியான, சாந்தமான, தூய்மையான குணம் படைத்தவர்கள் பாக்கியவான்கள் ஏனென்றால் அவர்கள்தான் இந்த உலகமக்களின் தவறுகளைப் போக்கி, தூய்மையானவர்களாக்கித் தம்பால் ஈர்த்துக்கொள்பவர்கள். — இயேசுநாதர்.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna:
Post Box: 49, Jaffna: Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆவணி மாதம் 12-ந் திகதி (28-8-70)

# நடுநிலைமை நாடுகளின் மகாநாட்டில் இலங்கையின் நிலை

கொழும்பு, வியாழன் இலங்கை ஒரு மண்டலச் சார்பற்ற நாடு என்பதை உலகுக்கு மெய்ப்பித்தபின்னர் லுசாக்காவில் நடைபெறும் மண்டலச் சார்பற்ற நாடுகளின் உச்சிமகாநாட்டுக்கு இங்கிருந்து ஒருதூதுக்குழு பிரதமர் சிறிமாவோவின் தலைமையில் செல்கிறது என அரசாங்க வட்டாரத்தைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் இது சம்பந்தமாகக் குறிப்பிடுகையில் திரு. டட்லி சேனநாயக்காவின் ஆட்சிக்காலத்தின் பிற்பகுதியில் இலங்கையின் மண்டலச்சார்பற்ற கொள்கை சந்தேகத்துக்கிடமானது. ஆசிய அயல்நாடுகள் பல சந்தேகத்தோடு இலங்கையை நோக்கின இதற்குக் காரணம் லுசாக்காவில் முன்னர் நடைபெற்ற மண்டலச்சார்பற்ற நாடுகளின் மகாநாட்டுக்கான ஆயத்த மகாநாட்டில் இலங்கை நடந்துகொண்ட முறை மேற்கத்திய நாடுகளின் சார்பாக இருந்ததெனக் கூறப்பட்டது.

இங்கு எதிர்க்கட்சி சேனநாயக்கா அரசாங்கம் 'மேற்கத்திய சார்புக் கொள்கை'யுடையதாக விருப்பதாகக் குற்றம் சாட்டியது. தற்போது திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஐக்கிய முன்னணி அரசாங்கம் திரும்பவும் இலங்கை மண்டலச் சார்பற்ற நாடுஎன்பதை செயலில் காட்டியுள்ளது கிழக்கு ஜேர்மனி, வடகொரியா, வடவியட்னும், தென்வியட்னுமிய புரட்சியரசு ஆகியவற்றோடு ராஜதந்திர உறவை ஏற்படுத்தியுள்ளதெனத் தெரிவித்தார்.

லுசாக்கா மகாநாட்டில் திருமதி பண்டாரநாயக்கா தலைமையில் செல்லும்தூதுக்குழு அங்கு வகிக்கவிருக்கும் நிலை பற்றி மேற்படி பிரமுகர் கூறியதாவது:-

இலங்கை தென் ஆபிரிக்காவுக்கு ஆயுதங்களை பிரிட்டன் விற்பனை செய்தலை எதிர்க்கும் ஏனெனில் இந்த ஆயுதங்கள் உள்நாட்டு இனக்கலகங்களை அடக்குவதற்குப் பயன்படுத்தப்படலாம் அத்துடன் அண்டை நாடுகளுக்கு எதிராகப்பயன்படுத்தப்படலாம். இந்தச் செயல் இப்பிரதேசத்திலுள்ள மற்ற நாடுகளிலும் யுத்தநோக்கத்தை ஏற்படுத்திவிடும் எனவும் அரசாங்கம் கருதுகிறது.

தென்ஆபிரிக்காவுக்கு ஆயுதங்களை விற்பனை செய்வதை தடைசெய்வதற்கு ஐக்கிய நாடுகள் சபையில் கொண்டுவரப் பட்ட தீர்மானங்கள். யாவற்றையும் ஏற்று இலங்கை அவற்றை ஆதரித்துள்ளது. இவ்விடயம்பொது சபை பாதுகாப்புச் சபைக்கு முன் சமர்ப்பிக்கப்படும் போதும் அதற்குப் பூரண ஆதரவு அளிக்கவிருக்கிறது

தென்வியட்னுமிய புரட்சி அரசாங்கம் லுசாக்கா உச்சி மகாநாட்டில் பூரண அங்கத்துவம் வகிப்பதற்கும் இலங்கை ஆதரவளிக்கும்.

கம்போடிய இளவரசரான சிகானுக்கின் அரசாங்கத்தினது பூரண அங்கத்துவத்தை ஆதரிப்பது குறித்து இன்னும் இலங்கை முடிவு செய்யவில்லை. எனினும் லொன்நொங் அரசின் அங்கத்துவதை இலங்கை மகாநாட்டில் எதிர்க்கும்.

ரொடீஷியாவில் சிறுபான்மையினரான வெள்ளையரின் ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைத்துப் பெரும்பான்மையினரின் ஆட்சி ஏற்பட வேண்டும் என்பதை மகாநாட்டில் இலங்கை வலியுறுத்தவிருக்கிறது.

ஏகாதிபத்தியத்துக்கும் காலணிமுறைக்கும் முடிவு ஏற்பட்டு போர்த்துக்கேய குடியேற்ற நாடுகளுக்கு ஐக்கிய நாடுகள் பிரகடன சாசனத்தின்படி சுதந்திரம் வழங்கப்படவேண்டும் என்பதையும் இலங்கைக் குழு எடுத்துக் கூறவுள்ளது.

மேலும் பிரதேசவாரியாக பொருளாதார முன்னேற்றத்துக்கு ஒத்துழைப்பது பொருளாளர் கூட்டுறவை ஏற்படுத்துவதின் அவசியத்தையும் இலங்கை மகாநாட்டில் வற்புறுத்தவிருக்கிறது ஆயுதங்களை மிகுதியாக உற்பத்தி செய்வதை இலங்கை விரும்பவில்லை இந்தக் கருத்தை உச்சிமகாநாட்டில் இலங்கை எடுத்துக்கூறும்.

ஆசியாவின் குரல் உலகில் நன்றாக ஒலிக்கத்தக்க வகையில் இலங்கைக்குழு மற்றும் மண்டலச் சார்பற்ற நாடுகளோடு நெருங்கியதொடர்பு கொண்டு ஒத்துழைக்கும் எனஎதிர்பார்க்கப்படுகிறது. (சி. பி. ஏ)

## நேரில் அறியவேண்டும்

ரயில் பிரயாணிகள் படும் கஷ்டங்களை ரயில்வே ஜெனரல் மனேஜர் நேரடியாக அறிந்துகொள்வதற்கு யாழ்தேவி அல்லது உத்தர தேவியில் மூன்றும் வகுப்பில் அவர் பிரயாணம் செய்யவேண்டும் என்று ஒரு ரயில் பிரயாணி யோசனை தெரிவித்திருக்கிறார். ஆங்கிலத்தினசரி ஒன்றில் அந்தப் பிரயாணி எழுதியுள்ள கடிதம் வெளிவந்திருக்கிறது. ரயில்வேயின் புதிய ஜெனரல் மனேஜரின் கவனத்தை அக்கடிதம் பெறுமென்று நம்பலாம்.

ரயில்வே உயர்தர அதிகாரிகளாயினும் சரி இலங்கைப் போக்குவரத்துச் சபை உயர் அதிகாரிகளாயினும் சரி சாதாரண பிரயாணிகளின் கஷ்டத்தை பிற ஊழியர்களிடமிருந்து தான் தெரிந்துகொள்ள முடியும். பிரயாணிகள் தாங்களாக தங்கள் கஷ்டங்களை எடுத்துக் கூறும்போதும் உயர் அதிகாரிகள் ஓரளவுதெரிந்து கொள்ளமுடியும். ஆனால் பிறர் மூலமும், பிறர் சொல்லியும் அறிந்துகொள்வதைவிட ஒருவர் எதையும் நேரில்கண்டு, கேட்டறிந்தால்தான் சரியான உண்மை நிலையை அறிந்து தெளிந்து கொள்ளமுடியும். நேரில் தெரிந்துகொண்டால் தான் குறைகளைக் களைந்து பிரயாணிகளைக் திருப்திப்படுத்தவும் வழிகாணமுடியும்.

ரயில்வே உயர் அதிகாரிகள் குளிர்சாதனம் பொருத்தப்பட்ட முதல்தர வகுப்புக்களில் பிரயாணம் செய்கிறார்கள்.

இலங்கைப் போக்குவரத்துச்சபை உயர் அதிகாரிகள் புதிய கார்களில் பிரயாணம் செய்கிறார்கள்.

இந்த நிலையில் இவர்கள் எப்படி ரயில், பஸ் பிரயாணிகளின் கஷ்டத்தை அறிந்துகொள்ள முடியும்.

அமைச்சர்களும் ஆட்சிமன்றப் பிரதிநிதிகள் பலரும் கூட ரயில்களில் வசதி நிறைந்த முதல்தர வகுப்பிலும், தினமும் பஸ்களிலும் பிரயாணம் செய்ய வேண்டுமென்று நாம் கேட்கவில்லை,

மாதம் ஒரு தடவையாவது இவர்கள் இப்படிப் பிரயாணம் செய்தால் பிரயாணிகளின் குறைகளைச் சரிவரத் தெரிந்துகொண்டு அவற்றை நீக்க வழிகாண முடிவதுடன் இந்தச் சேவைகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களும் எச்சரிக்கையுடன் தங்கள் கடமையைச் சீராகச் செய்யவும் முன்வருவர்.

இந்தியாவில் மத்திய அரசாங்க ரயில்வே அமைச்சர் திரு. குல்சாரிலால் நந்தா, மாறுவேடத்தில் சாதாரண மக்களுடன் ரயில்களில் பிரயாணம் செய்ததுடன் ரயில்நிலையங்களுக்கும் சென்று பிரயாணிகளினதும் ரயில்வே ஊழியர்களினதும் குறைகளை நேரில் கண்டும் கேட்டுமறிந்தார். இதன்பயனாக பிரயாணிகளினதும் ரயில்வே ஊழியர்களினதும் குறைகள், கஷ்டங்கள் முற்றாக நீங்கிவிடவில்லையென்றாலும் ஓரளவு குறைய வழிபிறந்திருக்கிறதென்பதை இந்திய மக்கள் பலர் ஒப்புக்கொண்டுள்ளனர். திரு நந்தாவின் முன் மாதிரியைப் பின்பற்றி சில மாநில அரசாங்கங்களின் அமைச்சர்கள் சிலர் பிரயாணிகளின் குறைகளை மட்டுமல்ல அரசாங்க இலாகாக்களில் பொதுமக்கள் படும் கஷ்டநஷ்டங்களையும் லஞ்ச ஊழல் புகார்களையும் மாறுவேடத்தில் சென்று அறிந்து உரிய நடவடிக்கைகளை எடுத்து மக்களின் நம்பிக்கையைப் பெற்றதுடன் ஊழல்களும் ஓரளவாவது குறைய நேர்ந்தது.

நமது அரசாங்கம் மக்கள் அரசாங்கம். மக்களுடன் மந்திரிகளும் ஆட்சிமன்றப் பிரதிநிதிகளும் நேரடியாகக் கலந்து பழகி அவர்களின் குறைகளை அறிந்து அவற்றை நீக்க முயற்சிசெய்வது கடினமல்ல. இந்தியாவில் உள்ளதுபோல் இங்கு நமது அமைச்சர்கள் மாறுவேடம் பூணவேண்டிய அவசியம்

## மிளகாய் உற்பத்தியில் வடபகுதி முன்னணியில்

யாழ்ப்பாணம், வெள்ளி ''வடமாகாணமே மிளகாய் உற்பத்தியில் முன்னணியில் திகழ்கிறது. இங்கு செய்கைபண்ணப்படும் மிளகாய் பிற நாட்டு மிளகாயின் தரத்திற்குநிகராகவுள்ளது''

இவ்வாறு விவசாயப் பகுதியினர் வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கிறது.

இரண்டாமிடத்தை வட மத்திய மாகாணம் பெற்றுள்ளதென்றும், தேவிபுரம், கலாவெவ, முசலி, சுன்னுகம் முதலிய இடங்களில் வன்னி மிளகாய் செழிப்பாக வளர்ச்சி பெறுகிறதென்றும் அவ்வறிக்கை தெரிவிக்கிறது. (கு.வி.ம.)

## 'திரைப்பட இறக்குமதியை அரசு கையேற்க வேண்டும்'

யாழ்ப்பாணம் வெள்ளி ''தேசிய கலாசாரத்துக்கு முரணான ஹொலிவூட்படங்கள், ஜேம்ஸ் பொண்டின் படங்கள் முதலானவற்றை முற்றாகத் தடைபண்ணுவதுடன் வெளிநாட்டுத் திரைப்படங்களின் இறக்குமதியை தனியார் துறைகளிடமிருந்து அரசு பொறுப்பேற்கவேண்டும்.''

இப்பிரேரணை நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஜே.பி. எம். நாடக கலாமன்றத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

திரு. ஆனந்தனின்தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பேசிய நாடக ஆசிரியர் திரு ஜே எம் இராசு குறிப்பிட்டவை வருமாறு:

அண்மையில் திரு. எம். ஸி. சுப்பிரமணியம் எம்.பி. தலைமையில் கலாசார அமைச்சரைச் சந்திக்கும் நாம் பெற்றோம். இச்சந்திப்பு நாடகக்கலைஞர்களுக்கும் நம்பிக்கை கூட்டக் கூடியதாக விருந்தது. இச்சந்திப்பு ஈழத்துக் கவிஞர்களுக்கு பயனீயும் தேசிய ஒருமைப்பாட்டின் உறுதியை இதுவரை எந்த அரசும் ஏற்படுத்தவில்லை ஏற்படுத்தவும் முடியாது. ஒருமந்திரியைச்சந்தித்து தமது பிரச்னைகளை எடுத்து விளக்கி, கருத்துக்கள் விளங்குவதற்கும், திட்டங்களை சமர்ப்பிப்பதற்கும், கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவம் மக்களரசு ஒன்றினால் மட்டுமே உண்டானது.

கூட்டத்தில் வேறு பிரேரணைகளும் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் பாரதி விழா நடாத்துவதென்றும் முடிவுசெய்யப்பட்டது. நடப்பு வருட நிர்வாகிகளாக தலைவராகப. ஆனந்தனும், பொதுச்செயலாளராக ஜே. எம். இராசுவும், பொருளாளராக ப. துரைராஜாவும் தெரிவு செய்யப்பட்டனர். 6 பேர்கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

---

## தண்ணீரை...

[1-ம்பக்கத்தொடர்ச்சி]

பாவிக்கப்படும் குழாய் நீரைக் கட்டுப்படுத்துவதன் மூலம் தண்ணீர்ப் பாவனையைக் குறைக்கமுடியும். 65,000 கலன் தண்ணீர் தற்போது பாவிக்கப்படுகிறது. ஆஸ்பத்திரியில் உள்ள 4 கிணறுகளிலும் சில்லறைப் பாவிப்புக்குரிய தண்ணீரை எடுப்பதன் மூலம் குழாய் நீர் உபயோகத்தைக் கட்டுப்படுத்தமுடியும். இது பற்றி நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.மாவட்ட வைத்திய அத்தியட்சகரிடம் நான் கேட்டுக் கொண்டுள்ளேன் குழாய்நீர் விநியோகத்தை புதிதாகவரியிறுப்பாளருக்கு வழங்க வேண்டாமென்றும் யாழ்ப்பாண மாநகரசபை நீர் விநியோக அதிகாரிகளுக்கு ஆலோசனை கூறியுள்ளேன். பொதுமக்களும் தண்ணீர் உபயோகிப்பதில் மிகவும் கட்டுப்பாட்டுடன் நடந்துகொண்டால் குடாநாட்டில் உவர்த்தன்மை அதிகரிப்பதைத் தடுக்கமுடியும்.

### மகாதேவா பாலம்

மகாதேவா பாலத்துக்கான அடிக்கல் 1967ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18ந் திகதி அப்போதிருந்த போக்குவரத்து அமைச்சரால் நாட்டப்பட்டது. பாலத்தின் அகலம் சம்பந்தமான பிரச்னைகளினால் பால அமைப்பு கடந்த 3 வருடங்களாகத் தடைப்பட்டு வந்துள்ளது. இதுபற்றி அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

### ஐயன்கன் குளம்

## செய்திச் சுருக்கம்

### ரயில்கள்மோதின

நேற்று முன்தினம் பொல்காவலை புகையிரத நிலையத்தில் இரண்டு சாமான் வண்டிகள் மோதிக் கொண்டதனால் பிரதான பாதையில் புகையிரத சேவைகள்பாதிக்கப்பட்டன. பாதையைச் சீர்படுத்துவதில் ஊழியர்கள் ஈடுபட்டனர்.

### புதிய அதிபர்

நில அளவைப்பகுதி அதிபராகத் திரு. ஸி. வன்னியசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். இவ்வளவு காலமும் நில அளவைத் திணைக்கள அதிபராகக் கடமையாற்றிய திரு. சி. ரி குணவர்த்தன ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து திரு வன்னியசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

### புதிய சட்டம் அமுல்

தனியார் துறையினரால் லைசென்ஸ் இல்லாமல் ஏற்று

...ணெய் ஊற்றி அனுப்புதல் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்துக்காகத் திருகோணமலைக்கும் கொழும்புக்கும் இடையில் கரையோரக் கப்பல் சேவையை நடத்துவது ஆகிய வேலைகளுக்கு உதவுவதற்காக புதியஉப கூட்டுத்தாபனம் ஒன்று நிறுவப்படஉள்ளது.

### அமைச்சர் வெளிநடப்பு

கடந்த செவ்வாயன்று பெலியகொடையிலுள்ள அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனவேலைத் தளத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இ[illegible] தொழிற் சங்கங்களின் ஆ[illegible]வாளர்களுக் கிடையில் கைகலப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து அக் கூட்டத்திற்குச் சமுகமளித்திருந்த வீ[illegible]மைப்பு நிர்மாணத் து[illegible] அமைச்சர் திரு பீட்டர்கெனமன் கூட்டத்தில்

வவனிக்குளம் கும்பாபிஷேகம்

## விசேஷ பஸ் சேவை விடுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி அடுத்தமாதம் வவனிக்குளத்திலுள்ள சிவபுரம் விநாயகர் ஆலயத்தின் கும்பாபிஷேகம் நடைபெற விருப்பதைத் தொடர்ந்து அயல் பகுதிகளிலும் வெளியூர்களிலுமிருந்து ஆலய தரிசனத்திற்கு வரவிருக்கும் மக்களின் சௌகரியத்தை முன்னிட்டு மாங்குளத்திற்கும் துணுக்காய்க்குமிடையில் வவனிக்குளம் நீர்ப்பாசனக்கந்தோர்வரை சென்று திரும்பக் கூடியதாக ஒரு விசேஷபஸ் சேவையை நடத்துமாறு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடபிரதேச முகாமையாளரை வவனிக்குளம் சிவாலயத் திருப்பணிச் சபை கேட்டுள்ளது. அன்றைய தினம் காலை 7மணி தொடக்கம் இரவு 10 மணிவரை சேவையை நடத்துமாறும் அதில் கோரப்பட்டுள்ளது.

கொஞ்சக் காலம் தொடக்கம் வவனிக்குளம் நீர்ப்பாசனக் கந்தோர்வரை இந்த பஸ் சேவை நடைபெறுதிருப்பது குறிப்பிடத்தக்கது. (கு வி ம)

... ...

## ஒழுங்கை விஸ்தரிப்பு

சுழிபுரம், [illegible]யா தொல்புரம் - சேணிக்

## "கலைகளைப் பேண வாரீர்!"

களுவாஞ்சிகுடி., வியா.

## அ இ. பட்டின சபைகள் சங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாணம் செய்கிறார்கள்.

இந்த நிலையில் இவர்கள் எப்படி ரயில், பஸ் பிரயாணிகளின் கஷ்டத்தை அறிந்துகொள்ள முடியும்.

அமைச்சர்களும் ஆட்சி மன்றப் பிரதிநிதிகள் பலரும் கூட ரயில்களில் வசதி நிறைந்த முதல்தர வகுப்புக்களிலும் மோட்டார் கார்களிலும் தான் பிரயாணம் செய்கிறார்கள். அவர்களும் எப்படி, பிரயாணம் செய்வதற்காக ரயிலையும் பஸ்களையும் நம்பியிருக்கும் சாதாரண பொதுமக்களின் கஷ்டங்களைச்சரிவர உணர்ந்து கொள்ளமுடியும்.

அமைச்சர்கள், ஆட்சி மன்றப் பிரதிநிதிகள், ரயில், பஸ் சேவை உயர் அதிகாரிகள் தினமும் ரயிலில் மந்திரிகளும் ஆட்சிமன்றப் பிரதிநிதிகளும் நேரடியாகக் கலந்து பழகி அவர்களின் குறைகளை அறிந்து அவற்றை நீக்க முயற்சிசெய்வது கடினமல்ல. இந்தியாவில் உள்ளதுபோல் இங்கு நமது அமைச்சர்கள் மாறுவேடம் பூணவேண்டிய அவசியம் கூட இல்லை.

கட்சி அங்கத்தவர்களையும் தேர்தல் வெற்றிக்காக உழைத்தவர்களையும் நம்பி அவர்கள் மூலம் மக்களின் குறைகளை அறிந்துகொள்ளலாமென்ற நம்பிக்கையை நமது அமைச்சர்களும் ஆட்சி மன்றப் பிரதிநிதிகளும் இனியாவது சிறிது குறைத்து தாமே எதையும் நேரில் அறிந்து தெளிந்துகொள்ள முயற்சிப்பது நல்லது'

# கண்டாவளை கொலை முயற்சி வழக்கில் இன்று தீர்ப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

கண்டாவளை கொலை முயற்சி வழக்கில் நேற்று எதிரிகள் சார்பில் ஆஜரான அட்வகேட் கே வி எஸ் சண்முகநாதன் தொகுப்புரை நிகழ்த்தினார். அதன் பின் முடிக்குரிய வழக்கறிஞர், தொகுப்புரை நிகழ்த்தினார்.

இவ்வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஏ எல் எஸ் சிறிமானே முன்னிலையில் 3வது தினமாக விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் கண்டாவளையில் 69ம் ஆண்டு மேமாதம் 7ம் தேதி சடையர் சின்னையாவைக் கொலை செய்ய முயற்சித்ததாக வி. சுப்பிரமணியம், வி. இரத்தினசிங்கம், வ. பொன்னம்பலம் ஆகியோர்மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது

எதிரிகள் சார்பில் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதன் புறக்டர் வி.ஏ, ஈ டாலசிங்கத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிரிக்காக அரசாங்கத்தால் அட்வகேட் ஏ. முத்துக்கிருஷ்ணன் நியமிக்கப்பட்டிருந்தார்,

இன்றுகாலை நீதியரசர் ஏ எல் எஸ் சிறிமானே உரைநிகழ்த்துவார், இதைத் தொடர்ந்து தீர்ப்பு வழங்கப்படும்,

# வெளிநாடுகளில் நமது புராதனச் சின்னங்கள்

கோட்டை, வியாழன்

வெளிநாடுகளில் பல்வேறு நிலையங்களில் இலங்கையின் பத்தாயிரம் புதைபொருள் சின்னங்கள் பாதுகாக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கின்றன.

வெளிநாடுகளில் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் மூலம் இது தெரியவந்துள்ளதெனத் தொல்பொருளாராய்ச்சித் திணைக்களத் தலைவர் டாக்டர் டி. சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் இது சம்பந்தமாக மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வெளிநாட்டிலுள்ள அரசாங்க நூதனசாலைகளிலும் மற்றும் தனியார் நிறுவனங்களிலும் மேற்படி புராதன சின்னங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இச்சின்னங்கள் யாவும் கிறிஸ்துவுக்கு முந்திய காலப்பகுதியிலிருந்து கிறிஸ்துவுக்குப் பின் 18-ம் நூற்றாண்டு வரை கண்டெடுக்கப்பட்டவைகளாகும்.

புராதன கால உடைகள், செம்பினாலும் கற்களாலுமான பல்வேறு சிலைகள் ஓலைச் சுவடிகள் ஆகியன இங்கு குறிப்பிடப்பட்டுள்ள புதைபொருள் சின்னங்களில் அடங்கும். பிரிட்டனில் மாத்திரம் 4000 ஓலைச்சுவடிகள் பேணிப் பாதுகாக்கப்பட்டுவருகின்றன.

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

திரு. சி. ரி குணவர்த்தன ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து திரு வன்னியசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

## புதிய சட்டம் அமுல்

தனியார் துறையினரால் லைசென்ஸ் இல்லாமல்ஏற்றுமதியாகும் ரப்பரையும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர வர்த்தகக்கொள்வனவு கொமிஷனர் தீர்மானித்துள்ளார்.

எல்லா ஏற்றுமதியையும் ஒழுங்குபடுத்தும் பொருட்டுப் புதிய சட்டம் அமுலுக்கு கொண்டுவரப் பட்டுள்ளது. இப் புதிய சட்டம் வெளிநாட்டுச் செலாவணி மோசடியைத் தவிர்க்குமெனஎதிர்பார்க்கப்படுகிறது,

## சுதந்திரக்கட்சி வெற்றி

வீரக்கெடிய கிராமசபைத் தேர்தலில் மொத்தம் 24 வட்டாரங்களுள் 18 வட்டாரங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெற்றியீட்டியது:

## கிராமப்புறங்களுக்கு மின்சார வசதி

இலங்கை மின்சாரசபை நாட்டிலுள்ள மொத்தம் 510 கிராமங்களுக்கு மின்சாரவசதியளிக்கும் திட்டம் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது. இத் திட்டத்தைச் செயல்படுத்த சகல ஆட்சி மன்ற உறுப்பினர்களையும் தங்களின் தொகுதிகளில் உள்ள மின்சார வசதியற்ற பகுதிகள் பற்றிய சகல விபரங்களையும் தமக்குத் தந்துதவும்படி நீர்ப்பாசனமின்சார நெடுஞ்சாலை அமைச்சர் திரு மைத்திரிபால சேனநாயக்கா கேட்டுள்ளார்

## புதிய உபகூட்டுத்தாபனம்

சபுகஸ்கந்தையிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்குத் தேவையான எண்

---

# சாரதியின் நேர்மை!

யாழ்ப்பாணம், வெள்ளி

டாக்சிக்குள் பெருந்தொகையான பணத்தை பையுடன் தவறவிட்டவரிடம் அதனை ஒப்படைத்தார் நல்லூரைச் சேர்ந்த டாக்ஸி சாரதி! டாக்ஸிச் சாரதியின் நேர்மையை பணத்தைப் பெற்றுக் கொண்டவர் வெகுவாகப் பாராட்டினார்.

---

டாக்டர் டி சில்வா வெளிநாடுகளில்5000க்கு மேலான இவ்விலங்கையின் புதைபொருள் சின்னங்களை ஆராய்ந்து நூல் பட்டியல் ஒன்றைத் தயாரித்துள்ளார்

இ[ரு] தொழிற் சங்கங்களின் ஆதரவாளர்களுக் கிடையில் கைகலப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து அக் கூட்டத்திற்குச் சமுகமளித்திருந்த வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் திரு பீட்டர்கெனமன் கூட்டத்தில் உரையாற்றாமலேயே வெளிநடப்புச் செய்தார்.

சம்பந்தப்பட்ட இரு தொழிற்சங்கங்களில் ஒன்று அமைச்சரை வரவேற்றதாகவும் மற்றது ஒத்துழைப்பு வழங்க மறுத்ததாகவும் தெரியவருகிறது.

# புங்குடுதீவுச் செய்திகள்

## பொதுக்கிணறு

ஊரதீவு, வியாழன்

வல்லன் கிராம முன்னேற்றச்சங்கத்தினர், கிராம முன்னேற்றப்பகுதியின் உதவியுடன் புங்குடுதீவு-வல்லன் பகுதியில் பொதுக் கிணறு ஒன்று அமைத்துள்ளனர் ஆண்பெண் இரு பாலாருக்குமென பிரித்துச் சுவர் எழுப்பப்பட்டு மிகுந்த வசதியுடையதாக இருக்கும் இக்கிணற்றுக்குக் கிராமமுன்னேற்றப்பகுதி நன்கொடையாக வழங்கியுள்ளது.

## மகாகும்பாபிஷேகம்

புங்குடுதீவு வல்லன் திருப்பெருந்துறை ஸ்ரீநாகநாதத் தம்பிரான் தேவஸ்தானத்தின் பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் அக்டோபர் மாதம் 19ந் திகதி நடைபெறவிருக்கிறது. பல அன்பர்களின் இக்கோவில் கட்டப்பட்டுவருகிறது.

## சனசமூகநிலையம்

புங்குடுதீவு கலைமகள் சனசமூக நிலையக் கட்டிடத்திற்கான அத்திபாரக் கல், அண்மையில் பேராசான் சி. இ. சதாசிவம் பிள்ளையால் இடப்பட்டது.

## ஆண்டுவிழா

ஊரதீவுக் கிராமமுன்னேற்றச் சங்கத்தின் இருபதாவது ஆண்டு நிறைவுவிழா விமரிசையாகக் கொண்டாடப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை மேற்படி சங்க நிர்வாகக்குழு செய்துவருகிறது.

## சுயாட்சிக்கழகம்

புங்குடுதீவுக் கிராமசபையின் தேர்தலின்போது சகல வட்டாரங்களிலும் தமிழர் சுயாட்சிக் கழகத்தின் சார்பில் அபேட்சகர்கள் போட்டியிடுவார்கள் என அறியப்படுகிறது. இதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விசேஷ பஸ் சேவையை நடத்துமாறு இலங்கைப்

# ஒழுங்கை விஸ்தரிப்பு

சுழிபுரம், யா

தொல்புரம் - கேணிக்கடவை ஒழுங்கை அகலிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்றுவருகின்றன. விரைவில் இவ்வீதி வேலைகள் முடிவடைந்துவிடுமென நம்பப்படுகிறது.

— —

# முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

கொடிகாமத்தில் அடுத்த மாதம் 14-ம்தேதி முத்தமிழ் கலைவிழா நடத்துவதென கொடிகாமம் இராமநாதன் கழகம், நேற்று திரு எஸ் எம் கமலநாதன் தலைமையில் கூடியபோது தீர்மானித்தது.

— —

# மீசாலை தமிழிசைவிழா

மீசாலை, வெள்ளி

மீசாலைத் தமிழிசை விழாவின் இன்றைய நிகழ்ச்சிகள் பின்வருமாறு.

இன்றைய நிகழ்ச்சிகளுக்கு வட மாநிலக் கல்விப் கணிப்பாளர் திரு வே. சங்கரலிங்கம் தலைமைவகிப்பார். செல்விகள் கு கமலாதேவி, சு. அம்பிகை, சிகோமதி, த விஜயலட்சுமி, கா சரோஜினிதேவி, ச ஈஸ்வரி ஆகியோரின் கோஷ்டிகானத்தை அடுத்து செல்வி சரஸ்வதி பிள்ளை கார்த்திகேசுவின் இன்னிசைக்கச்சேரி நடைபெறும்.

சங்கீதரத்தினம் சௌந்தரவல்லி உமா மகேஸ்வரன், இசைமணி மோகனும் பிகை கணேசன், சங்கீத வித்துவான் ராம் குமாரசாமி ஆகியோரின் இன்னிசைக் கச்சேரிகள் இடம் பெறும்.

கடைசிநாளாகிய (சனிக்கிழமை) நாளைய நிகழ்ச்சிகளுக்கு வட்டாரக் கல்வி அதிகாரி திரு வெ. கந்தசாமி தலைமை தாங்குவார்.

இசைமணி பூமணிஇராசரத்தினம், சங்கீதபூஷணம் பி முத்துக்குமாரசாமிசர்மா ஆகியோரின் இன்னிசைக் கச்சேரியும், சங்கீத வித்துவான் அ நமசிவாயத்தின் வேய்ங்குழலிசையும் இடம் பெறும். (கு வி ம

## கடும் வரட்சி

இங்கு நிலவும் பெரும் வரட்சி காரணமாகக் கால் நடைகளுக்குப் பெருமளவில் நோய் பரவிவிட்டது அநேக கால்நடைகள் நோயினால் மடிந்துள்ளன.

(கு வி ம)

... ...

# "கலைகளைப் பேண வாரீர்"

களுவாஞ்சிகுடி, வியா.

"மறைந்து போகும்தமிழ் மக்களின் கலை கலச்சாரம் மீண்டும்புத்துணர்ச்சி பெற்றுமறுமலர்ச்சியடையநாம் ஒன்று கூடி கலாமன்றங்களை அமைத்து கிராமியக் கலைகளையும் பாதுகாக்க முன்வரவேண்டும்" இவ்வாறு களுவாஞ்சிகுடி காரியாதிகாரியின் பிரிவில் தொடங்கப்பட்ட மட்டக்களப்பு பிரதேச கலாமன்றக் கிளையின் அங்குரார்ப்பணக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய களுவாஞ்சிக்குடி காரியாதிகாரி திரு.ஏ தில்லைநாதன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கலைஞர்கள் ஒற்றுமையாக கலையைவளர்த்து கலையின் மூலம் எல்லோரிடமும் ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும்.

பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர் தலைவர் திரு, ஏ. தில்லைநாதன் இணைச் செயலாளர் திரு. பீ. பேரின்பராசா திரு. கா. சுப்பிரமணியம் பொருளாளர் திரு. சி. அரசரத்தினம்,

# விநாயகரை யானைக்குட்டி வரவேற்றது

யாழ்ப்பாணம், வெள்ளி

வவனியாவில் இருந்து இம்மாதம் 21-ந் திகதி தொடக்கம் 25-ந் திகதி வரை நடைபெற்ற வவனிக்குள விநாயகர் ஊர்வலத்தில் எதிர்பாராத புதுமையொன்று நடைபெற்றது. ஊர்வலம் புளியங்குளத்தை யடைந்தபோது சிறிய யானைக்கன்று ஒன்று விநாயகர் ஊர்வலத்தை வரவேற்றது.

தாயை விட்டுப் பிரிந்த இந்தக் கன்று விவசாயிகளால் பிடித்து வைக்கப்பட்டிருந்தது. இதை ஒரு சுப நிகழ்ச்சியாக பொதுமக்கள் கருதுகின்றனர். இக்கன்று விரைவில் அரசாங்கத்திடம் கையளிக்கப்படவிருப்பதாகத் தெரிகிறது.

(கு. வி. ம.)

கடந்த 3 வருடங்களாகத் தடைப்பட்டு வந்துள்ளது. இதுபற்றி அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## ஐயன்தன் குளம் நீர்ப்பாசன வசதி

ஐயன்தன்குளம் நீர்ப்பாசன விஸ்தரிப்புக்கென அரசாங்கம் பெருந்தொகையான பணத்தை ஒதுக்கியுள்ளபோதிலும் இதுவரை அப்பணம் ஆக்கவேலைகளில் ஈடுபடுத்தப்படவில்லை ஐயன்தன் குளத்திலிருந்து புதுமுறிப்புக்கு நீர் விநியோகிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இதனால் இங்கு குடியேறிய மக்கள் பெரிதும் கஷ்டமுறுகின்றனர். இதுபற்றியும் நீர்ப்பாசன, மின்சார, நெடுஞ்சாலை அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்காவுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு இணைப்புக்கு குழுக் கூட்டத்தில் தீர்மானித்துள்ளோம்.

கிளிநொச்சி கனகாம்பிகை (இரணைமடு) குளத்தில் 1968-ம் ஆண்டு குடியேறியவர்களுக்கு இதுவரை குளம் திருத்தப்பட்டு நீர்ப்பாசனவசதி வழங்கப்படவில்லை வாய்க்கால் வெட்டப்படாததால்இதில்தாமதமேற்பட்டுள்ளது.

அதேபோல விஸ்வமடுக் குளத்தில் மேட்டுக்காணியில் 240 ஏக்கர் உள்ள 120 துண்டுக்காணிகளுக்கு நீர்ப்பாசனம் வழங்கப்படவில்லை இது பற்றி நீர்ப்பாசனபகுதியினருடன் தொடர்புகொண்டபோது45 துண்டு காணிகளுக்கு தற்போது நீர்வழங்க ஏற்பாடுசெய்யப்படுவதாக அறிவித்துள்ளனர். மிகுதிக்காணிகளுக்கும் நீர்வழங்கும் படி அமைச்சரிடம் வற்புறுத்துவதற்கு இணைப்புக்குழு தீர்மானித்துள்ளது" என்றார்.

பொது மக்களின் நலன் கருதி அவர்களின் குறைபாடுகள் பற்றி ஆராய்வதற்கு இரண்டு உபகுழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிக்கச் சம்மதம் தெரித்துள்ளதாகவும் அரசாங்க அதிபர் கூறினார்,

போக்குவரத்து நீர்ப்பாசனத்துக்கென ஒரு உபகுழுவும், சுகாதாரம், கல்வி' சமூகசேவை வீடமைப்பு பற்றிக்கவனிக்க வேறொரு குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார் மாதம் ஒருமுறை இக்குழு கூடிமாவட்ட இணைப்புக்குழுக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்ட தீர்மானங்களை அமுல் நடத்துவது பற்றி ஆராயும் என்றும் அவர் சொன்னார்.

நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

---

# அ இ, பட்டின சபைகள் சங்க மகாநாடு

கோட்டை, வியாழன்

அகில இலங்கை பட்டின சபைகள் சங்கத்தின் மகாநாடு இம்மாதம் 29-ம் திகதி பொலநறுவையில் நடைபெறவிருக்கிறது.

பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இம்மகாநாட்டுக்குத்தலைமை தாங்குவார். பொதுநிர்வாக உள்ளூராட்சிமன்ற, உள்ளூர் நிர்வாக அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவும் இம்மகாநாட்டில் கலந்துகொள்ளுவார்.

பட்டின சபைகளை எதிர்நோக்கியுள்ள பல்வேறு பிரச்னைகள் குறித்து இம் மகாநாட்டில் ஆராயப்படவிருக்கிறது.

---

# உள் நாட்டமைச்சருக்கு நன்றிப் பிரேரணை

கைதடி, வியாழன்

கைதடி ல. சு. கட்சிக் கிளை, உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு ரி பி இலங்கரத்தினாவிற்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை நிறைவேற்றியுள்ளது. தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சமாசத்தில் கடமையாற்றி வேலைநீக்கம் செய்யப்பட்ட எஸ், என் ஜெயதாஸ் என்பவருக்கு மீண்டும் வேலை வழங்க ஏற்பாடு செய்ததைத் தொடர்ந்து அமைச்சருக்கு நன்றிப் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

---

# வடபகுதி ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டார்.

அரசாங்க ஊழியர்களையும், ஆசிரியர்களையும் இடமாற்றம் செய்வதை நிறுத்துமாறு பிரதம மந்திரி உத்தரவிட்டிருந்தபோதிலும் காரியாம்சத்தில் இது நடைபெறவில்லையென்றும் திரு. பஸநாயக்கா சொன்னார். இந்த அரசு சிங்கள, பௌத்த நிலைமைகள் குறித்து அக்கறை எதுவும் காட்டவில்லையென்றும் அவர் குறைகூறினார்.

பண்டித லபுஹேன்கொட சந்திரரத்தின தேரோ பேசுகையில் வடபகுதியிலும் கீழ் மாகாணத்திலும் பௌத்த மதத்தில் அக்கறைகாட்டும் தமிழ்மக்களுக்காக பிரிவெனக்கள் ஆரம்பித்தால் அரசாங்கத்தின் ஆதரவு நிறையகிடைக்கும் என்று நம்பிக்கைதெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org